வார இதழ்.
மு. கருணநிதி
2 அணா

முரசு 2 | சென்னை | 26-8-55 | வெள்ளி | ஒலி 22



# ★ குறளோவியம் ★

கருணா

பெண்களைக் கொடியெனக் கூறினர்-ஏன்? துவண்டிடும் மேனியர் என்பதாலா? வளைந்து நடம்புரியும் மெல்லியலார் என்பதாலா? இல்லை-இல்லை! கொடி ஒரு மரத்தைத் தழுவிக் கிடப்பதுபோல பெண்ணுக்கும், தான் படர்ந்து கிடக்க ஒரு [illegible] தேவை. கொடி படர்ந்த மரத்திற்கே [illegible] எழில்தான்! கொடி படரா மரங்கள் நிர்வாண மனிதர்களைப் போல!

கோட்டையின் உச்சியிலே கொடி பறந்தால்தான் கோட்டைக்குப் பெருமை! கொடிக்கும், கோட்டையின் உச்சியிலே பறக்கும்போதுதான் அதிக மதிப்பு.

ஆணின் இருதயக் கோட்டையிலே ஒரு பெண்கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டேயிருக்க வேண்டும்!

வள்ளுவனார், மாந்தர்க்கு இல்லறத்தை வலியுறுத்தியதின் வாயிலாகவும் — காமத்துப் பாலை வழங்கியதின் வாயிலாகவும்-இந்த உண்மையைத் தெளிவாகவும், தெளிதேனினும் சுவையாகவும் விளக்கியிருக்கிறார். அப்பப்பா! அவர் படைத்துள்ள காதற் குறள்கள் எத்தனை எத்தனை வகை! அத்தனையும் தமிழ்ப் பண்புக்கு ஏற்ற வகையில் அளிக்கும் உவகை!

ஊடலுக்குப்பின் கூடலே தனிச் சிறப்புடைத்து என்பது குறளாரின் எண்ணம். அனுபவமுள்ளோருக்குத் தெரிந்த உண்மையுங் கூட!

அத்தகைய இரு இளம்புருக்களை, இதோ சந்திக்க விடுகிறேன் பாருங்கள்!

கொடி மலர் சூடினால்தான் கோதை கோபிப்பாளே, என எண்ணி, அவன் கிளைகளில் மலர்ந்த பூக்களைச் சூடிக்கொண்டு வருகிறான். அப்போதும், அவள், [illegible]வனைப் பார்த்து, 'நீர் யாரோ ஒருத்திக்கு உமது அழகைக் காட்டுவதற்காக இதைச் சூடினீர்' என்று சினம் கொள்ளுகிறாள்.

"கோட்டுப் பூச்சூடினும் காயும்
ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று."

கொஞ்சித் தாவி அணைத்திடும்போது தன் கோமளவல்லியின் முகத்தை அவன் சரியாகப் பார்த்திட இயலாது ஏனெனில் இருவர் முகமும் ஒட்டிக் கிடக்கும் வேளை அது! நான்கு கண்களுமே பார்வையற்றுப்

★ தொடர்ச்சி 12-ம் பக்கம்

# இந்தி – ஒரு விளக்கம்!

"...ப்பக்கம் வந்து புகுந்துவிடும்
—இந்தி
...த்தனை பட்டாளம் கூட்டி
வரும்?
...ப்பமென்போம் அந்த இந்தி
தனை—அதன்
...திக்கந்தன்னைப் புதைத்திடு
வோம்"

புதுவையின் புரட்சிக் குரல் ...யாக ஏழு ஆண்டுகளுக்கு முன், ...திராவிட நாடு" இதழில், ...ாண்ட மொழியின் பண்பினைக் ...க்கக் கனக விஜயர் பரம்பரை ...ர் செய்த சூழ்ச்சி ஏற்பாட் ...ச் சுட்டிக்காட்டி எச்சரிக்கை ...த்தது. கவிக்குயிலின் குரலைக் ...ட்ட திராவிடர்களின் தோள் ...ல்லாம் தினவெடுத்தன.

...48-ம் ஆண்டு, ஆகஸ்ட் ...-ம் நாள்! சொந்த மொழியின் ...வு குலைக்க வந்த மொழியை, ...றுத்து, வாகை சூட, செந் ...க் காளையரும், கன்னியரும் ...யெழுந்த நாள்!

"...தமிழ்க்குத் தீமை வந்த
பின்னும் இந்தத்
...மிருந்தோரு லாபமுண்டோ?"

...காளையர் கன்னி...ரைப் பார்த்துக் ...ட்டனர். காதலி ... ஆமோதிப்புக்கு ...திறியாகக் கன் ...டை காட்டினர். ...ண்ணின் கடைப் ...ர்வை காதலியர் ...ட்டி விட்டால், ...ன்னில்குமரர்க்கு ...மலையும் ஓர் கடு ...ம்!" என்று கூறிய ...நம் புரட்சிக்கவி ...தானே? இன்பம் ...ய அந்தத் தமிழ் ...பங்களெல்லாம் ...மலையாயின. புதிதாகத் திரு...மான ஓரிரு பூவையர்மட்டும் ...ப் பிணங்கினர். மணமான ...மாதமே மணாளன் களம் ...ன்றுவிட்டால்... கண் கலங்கத் ...னை செய்யும்? குவளை மலர்கள் ...ண் முத்து சிந்தின. ஆறுதல் ...ல்லுகிறான், அவன்! தேறுதல் ...டைகிறாள் அவள். கொள்கைத் ...வு பெற்றவுடன்! 'அறப்போ... வெற்றிபெற்றால்வீரனாகவாகை ...விடு திரும்புவேன்: இல்லை ...,தமிழுக்காக உயிர் நீத்தானே ...தத் தறுகணாளன், அவன்தான் ...மணாளன், என்று கூறிப் ...க்கும் பெறும் பேறு உன்னு...யது." என்று கூறி வேல்விழி ...ளிடம் விடை பெறுகிறான் அத் ...க்காளை. அவள் கண்களில் ...பொழுது ஏக்கம் இல்லை, ...தனை இல்லை! பூரிக்கும் இதயத் ...டு புன்முறுவலால் பதில் ...ரிக்கிறாள். சிம்ம நடைபோட்டு.

"...ங்கை ஒருத்தித் தரும் சுகமும்
—எங்கள்
...ாத்தமிழ்க் கீடில்லை என்றுரைப்
போம்!"

...ன்று சிங்காரப் பண்ணிசைத்து, ...ாழி காக்கப் புறப்படுகிறான் ...ந்த முத்தமிழ்ச் செல்வன்.

★

...த்தகைய காட்சியை அன்று ...சாரியாருடைய ஆட்சிக் காலத்திலேயும், அதன் பிறகு 1948-ல் நடந்த அறப்போரிலும் கண்டோம். முதல் இந்தி எதிர்ப்பு அறப்போரில் இந்தி ஏகாதிபத்தியத்திற்கு முன்னேடியாக இருந்து, துப்பாக்கித் துரைத்தனமும் தடியடி தர்பாரும் நடத்திய ஆச்சாரியாரே வழுக்கிவிட்ட பிறகு, மத்திய மந்திரிசபையின் கல்வி இலாகா ஜுலை 10-ந் தேதி இந்தி ஏகாதிபத்ய அறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கிறது. அது பதினைந்து ஆண்டுகளில், மூன்று ஐந்தாண்டுத் தவணையாக, இந்தி பேசாத பிரதேசங்களில், இந்தியை நுழைக்கும் திட்டம். இந்த ஆண்டு புதிய முறையில், இறுதியாக, அனைத்துலகும் அறியும் வகையில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஆரம்பிக்கப் போகிறேன் என்று பெரியார் 'போர் முரசு' கொட்டிய பிறகுதான், மத்திய அரசாங்கக் கல்வி இலாகாவின் மேற்சொன்ன அறிக்கை வெளியாயிற்று. இந்த அறிக்கையைப்பார்த்த பிறகுதான் பெரியார் கிளர்ச்சியை தீவிரமாக்க யூனியன் கொடியை ஆகஸ்ட்1-ம் தேதி எரிக்கப் போவதாக அறிவித்தார். எந்த காமராஜர் அறிக்கையின் காரணமாகப் பெரியாரின் கொடி எரிப்புக் கிளர்ச்சி ஒத்திப் போடப்பட்டதோ, அந்த ஒத்திப் போட்டார். ஆனால், காமராஜருடைய அறிக்கை, குடியரசுத் தலைவரின் வாக்குறுதியைச் சுட்டிக்காட்டுகிறதே தவிர, இந்தி ஏகாதிபத்யத் திட்டமான கல்வி இலாகா அறிக்கைபற்றி ஜாடை கூடக் காட்டவில்லை. தவிர, காமராஜருடைய அறிக்கையில், மாகாண அரசியல் அலுவல்கள் எந்த மொழியில் நடைபெற வேண்டுமென்பதை முடிவு செய்யும் அதிகாரம் மாகாண சட்ட சபைக்கே உண்டு என்று அரசியல் சட்டத்தில் காணப்படுவதாகக் குறிப்பிடுகிறது. எனவே, சட்ட சபை இந்திக்கு எதிராகவும் தமிழுக்கு ஆதரவாகவும் முடிவு செய்ய வேண்டுமானால், இந்தி எதிர்ப்போர் சட்ட சபையில் நுழைவதற்குத் தேர்தலுக்கு நிற்பது அவசியமாகிறது.

இதுதான் பிரச்சினை. குட்டை குழப்புவதில் பயனில்லை. அப்படியானால், மத்தியக் கல்வி இலாகா இந்தி பேசாத மக்களுக்கு வழங்கியிருக்கும் அடிமைச் சாசனத்தின் ஷரத்துக்கள் என்ன? (கீழேயுள்ளது, கல்வி இலாகா அறிக்கை. '...ந்து' பத்திரிகையில் வெளி வந்துள்ளதின் சுருக்கம்.)

"இந்தியை அரசியல் திட்டத்தில் கண்டுள்ளபடி, பதினைந்து ஆண்டுகளில் அரசாங்க மொழியாக்க சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுத்துள்ளது.

## சங்காரம் நிசமென சங்கே முழங்கு!

அறிக்கை மத்திய கல்வி இலாகாவின் திட்டம் பற்றி ஏதும் குறிப்பிடவில்லை. அந்தக் காமராஜரின் அறிக்கை சுட்டிக்காட்டும் குடியரசுத் தலைவரின் ஹைதராபாத் வாக்குறுதிக்குப் (அதாவது, இந்தி பேசாத மக்களின் நலனைப் புறக்கணிக்கும் வகையில் இந்தி திணிக்கப்பட மாட்டாது) பிறகு தான் மத்திய கல்வி இலாகாவின் அறிக்கை வெளியிடப் பட்டது என்பதையும் நாம் மறப்பதற்கில்லை. ஆகவே நிலைமை இதுதான்:

1. இந்தியை, இந்தி பேசாத மக்களின் நலனைப் பாதிக்கும் வகையில் திணிக்கமாட்டோம் என்று ஹைதராபாத்தில் பேசும் பொழுது குடியரசுத் தலைவர் குறிப்பிட்டார்.

2. அவர் பேசிய சில தினங்களுக்குப் பிறகுதான் அவருடைய வாக்குறுதிக்கு முரணான வகையில், இந்தி பேசாதோர் மீது இந்தியைத் திணிக்கும் மத்திய அரசாங்கக் கல்வி இலாகாவின் திட்டம் வெளிவந்தது.

3. ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு 1-ல் இந்தி எதிர்ப்புப் போரை நடத்திய பெரியார், கல்வி இலாகா அறிக்கைக்குப் பிறகு, தன் கிளர்ச்சியைக் கொடி கொளுத்தும் தீவிரக் கிளர்ச்சியாக்கினார்.

4. ஜுலை 29-ந்தேதி காமராஜர் விட்ட அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு பெரியார் கிளர்ச்சியை

1. முதல் ஐந்தாண்டுகளில் இந்தியில் கலைச் சொற்கள் ஆக்குவதும், இந்தி பேசாத பிரதேசங்களில் அதை-இந்தியைக்-கட்டாயப் பாடமாக்குவதும் ஆகும். சுமார் 26,000 கலைச்சொற்கள் விஞ்ஞானப் பாடங்களில் ஏற்கனவே தயாராகிவிட்டன.

2. இரண்டாவது ஐந்தாண்டுகளில், இந்தி பயின்ற மாணவர்கள் (பள்ளிகளில் இந்தி கட்டாயப் பாடமாகிவிட்டதால்) நிறைய இருப்பார்கள். இப்பொழுது இந்தி பேசாத பிரதேசங்களில் இந்தியில் முதியோர் கல்வி நடைபெறும்.

3. மூன்றாவது ஐந்தாண்டுகளில் ஆங்கிலத்தோடு இந்தியும் மத்திய அரசாங்க நிர்வாக அலுவல்களிலும், மத்திய-ராஜ்ய சர்க்கார் கடிதப் போக்குவரத்துகளிலும் இடம்பெற்று, படிப்படியாக ஆங்கிலம் இப்பொழுது பெற்றுள்ள இடத்தைப் பெறும்.

தொன்மையான மொழி, இலக்கிய வளம் படைத்த மொழி, பேசினால் நாவினிக்கும் — கேட்டால் செவி மணக்கும்—சிந்தித்தால் சிந்தையெல்லாம் தளிர்க்கும் நீந்தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் உள்ளுவரோ, உருவற்ற, உணர்வற்ற, உதவாக்கரையாம், உளுத்தர் மொழியாம் இந்தியை? கேட்பது நாமல்ல; மொழியாராய்ந்த வல்லுநரெல்லாம் கேட்டுவிட்டனர். எந்த இந்தி சீடர் இதற்குச் சமாதானம் கூறினர்? அதுமட்டுமா? அடிமைச் சாசனமே அல்லவா நீட்டிவிட்டார்கள். எனவே தான் தமிழ்ப்படை முழங்குகிறது:

"விந்தைத் தமிழ்மொழி எங்கள்
மொழி—அது
வீரத் தமிழ் மக்கள் ஆவி
என்போம்
இந்திக்குச் சலுகை தந்திடுவார்
—அந்த
ஈனரைக் காறி யுமிழ்ந்திடு
வோம்."

★

முதல் ஐந்தாண்டுகளில் இந்தியில் பொருளியல், விஞ்ஞானம், தொழிலியல், அரசியல் ஆகிய துறைகளில் பயன்படுமாறு புதிதாக கலைச் சொற்கள் ஆக்கப் போவதாகக் கூறும் இந்தச் சிறு மதியாளரின் கூற்று கேட்டு நமக்கு சிரிப்புத்தான் வருகிறது. வளர்ந்து வரும் அறிவியல் கலைகளைப் புரியவைக்கப் போதுமான தகுதி, மொழியாக முழு வளர்ச்சியடையாமல் சொற்கூட்டமாக இருக்கும் இந்திக்கு எப்படி உண்டு? இந்த மூளையற்ற முயற்சிக்காக ஏழையின் வரிப்பணம் விரயமாவதா? இலக்கியவளம் படைத்து, இலக்கண வரம்பு கொண்டு, சொற்செறிவுடைய தமிழில் கலைச் சொற்கள் ஆக்குவதிலேயே தொல்லைகள் இருக்கும் போது, இந்தியில் இம்முயற்சியைத் தொடங்குவது வீண் வேலையல்லவா?

இந்தி மொழி பேசாத பிரதேசங்களில், அம்மொழி (?) கட்டாயப் பாடமாக்கப் படுமாம். கட்டாயப் பாடமாக்கப் பட்ட அவஸ்தையை ஆச்சாரியாரைக் கேட்டால் சொல்லுவாரே; சீறியெழும் செந்தமிழ்ச் சிங்கங்களுக்கு சிறைக் கோட்டம் கட்டிய பிறகல்லவா, இத்திருப்பணி ஆரம்பமாக வேண்டும்! இந்தி நுழைய எண்ணிய காலத்திலிருந்தே திராவிடர் அதன் நுழைவைத் தீவிரமாக எதிர்த்து வந்திருக்கின்றனர். கடந்த பதினெட்டு ஆண்டு காலமாகப் பள்ளிகளில் இந்தி நுழைப்பு எந்த அளவுக்கு வெற்றிபெற்றிருக்கிறது? இந்திப் பரீட்சையின்போது, அரை மணி ஆனவுடனேயே மாணவர்கள் அணி அணியாக வெளியேறுவதைப் பார்க்கிறோம். பரீட்சையறையில் அரை மணி நேரமாவது இருக்க வேண்டும் என்ற நிபந்தனை இருப்பதால்தான் இந்த நிலையும். வினாத் தாளைப் பார்த்து அப்படியே காப்பியடித்தால்கூட பாஸ் மார்க் உண்டு என்று கூறியும், மாணவர் கொடுப்பது வெறும் வெள்ளைக் காகிதம்தானே! இந்தச் செய்தி தவறானது என்று கூற யாராவது முன் வருவார்களா? ஒரு சில அக்கிரகார அணங்குகளும், வயிற்றுப் பிழைப்புக்காகப் படிக்கும் முன்ஷிகளும் தவிர, வேறு யாருக்காவது இந்தியினிடம் அபிமானம், அக்கரை உண்டா? அரசியல் கருத்துக்களைச் சரியாக இந்தியில் சொல்ல முடியாமல், ஆவடியில் நேருவே தவித்தாரே; சி. வி. ராமனின் தத்துவத்தை, பொருள் கெடாமல் இந்தியில் சொல்ல முடி

★ தொடர்ச்சி 4-ம் பக்கம்

Bleed through

# தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 26—8—55 வெள்ளி

## வாக்குறுதிகள்!

ஒப்பந்தங்களை மீறுவதற்கென்றே இட்லர் உடன்படிக்கைகள் செய்து கொள்வானும். அந்த இட்லர் மனப்பான்மை இன்று கதருடை தரித்து—மக்களைப் பதரென நினைக்கும் பண்புகொண்டோரின் நெஞ்சத்திலே கொஞ்சி விளையாடக் காண்கிறோம்.

நாட்டின் காவலனாய் இருக்க உறுதிபூண்டு, மன்ற மேறுவோர் வாய்ச்சொல் வீரர்களாய்—வெறும் பேச்சுக்காரர்களாய் உலவிடும் தன்மை மலையென வளரும் போக்கு இந்த நாட்டிலேதான் மலிந்து காணப்படுகிறது.

கடந்த பிப்ரவரி மாதம் 26-ம் தேதியிலிருந்து மார்ச் மாதம் 10-ம் தேதிவரை சென்னை அமைச்சர்கள் 198-வாக்குறுதிகளை வழங்கியிருக்கின்றனராம். அவைகளில் ஜூலை 15-ம் தேதி வரை இருபத்தி இரண்டே வாக்குறுதிகளதான் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவாம்.

பெருவாரியான ஓட்டுகள் பெற்று பாராளும் உரிமையைப் பெற்றதாகப் பறைசாற்றிக் கொள்வோர்—ஜனநாயகத்தின் உழுவலன்பர் என்று வாதம் புரிவோர்—ஆகிய இத்தனை சிறப்புகளுக்கும் தாங்களே சூத்ரதாரிகள் என்று சொல்லிக் கொள்ளும் காங்கிரஸ் அமைச்சர்கள்தான் இந்தக் கொடுமைக்குப் பாத்திரங்களாயிருக்கிறார்கள்!

கொடுத்த வாக்குறுதிகள் 198! அவைகளில் காற்றிலே பறக்க விடப்பட்டவை 176!

—எண்ணிக்கை காட்டும் இந்த இழிநிலை பொது வாழ்விலே கண்ணியம் காப்பதையே கருத்தில் வைத்திருக்கும் நம் போன்றோருக்கு நஞ்சுபோல் இருக்கலாம்! ஆனால் மூவர்ணக் கொடி ஏந்தி—பால் வண்ண ஆடை தரித்தோருக்கோ இது சர்வ சாதாரணம்!

சாம்பல் மேட்டிலே ஓரிரு கீரை விதை முளை கட்டுவதைப் போல, 198-ல் இருபத்தி இரண்டை நிறைவேற்றி யிருக்கிறோம்—என்று இறுமாப்புகூட எய்துவர்—வானத்தைக் கீறி வழிகாட்டுவதாக வாய்மொழி பேசி கூறை ஏறத் தெரியாத குள்ளமதி கொண்டோர்!

சென்னை மாநிலத்தின் அமைச்சர்கள் மட்டும்தான் தண்ணீரிலே வாக்குறுதி எழுதித் தருவோர் என்று யாரும் நினைத்துவிட வேண்டாம்! 'சென்னை'யை அதட்டி, ஒடுக்கி, ஆணையிட்டு நடத்திவரும் ஏகாதிபத்யப் பண்ணையாம் டெல்லியும்—முல்லைத் தோட்டம் தருவதாகச் சொல்லி விட்டு கள்ளிக் காட்டைத்தான் காட்டி வருகிறார்கள்!

1953-ம் ஆண்டு நிறுவப்பட்ட வாக்குறுதிக் கமிட்டியின் கணக்குப்படி, பாராளு மன்றத்திலே மத்திய மந்திரிகள் தந்த 760 வாக்குறுதிகள் முப்பத்தி மூன்று மாதங்களாக நிறைவேற்றப் படாமல் இருக்கின்றனவாம். 39 வாக்குறுதிகள் தந்து இரண்டு ஆண்டுகள் மறைந்தும்கூட இன்னும் அவைகள் கவனிக்கப்படவில்லையாம்.

மேலும் இரண்டு ஆண்டுகளாக 108 வாக்குறுதிகளும், ஆறு மாதங்களாக 79-ம், இரண்டு மாதங்களாக 191-ம் நிறைவேற்றப் படாத பட்டியலை நிரப்பிக்கொண்டு நிற்கின்றனவாம்!

கோலபீடம் ஏறியோரின் கடமை மறந்த செயல் கடலென வளர்ந்து வருகிறது.

உடைப்பெடுத்த வெள்ளத்தைத் தற்காலிகமாக நிறுத்திவைக்க உறுதிமொழி தருவதும், அதை இறுதிவரை காப்பாற்ற முடியாமல் காற்றிலே பறக்கவிடுவதும்தான் பண்புள்ளோர் பெறவேண்டிய பதக்கமா? மக்கள் மன்றத்தின்மீது பேரன்பும், பெரு மதிப்பும் கொண்டோர் அடைய விரும்பும் அலங்கார விருதுகளா?—கோலோச்சுபவர் மீது இப்படியெல்லாம் கேள்விக் கணைகள் பாய்கின்றன.

ஆனால் இதற்கெல்லாம் அஞ்சுபவர்களல்ல ஆகஸ்ட் பதினைந்தில்-அர்த்த ராத்திரியில் சுதந்திரம் பெற்றோர்! இவைபோன்ற ஆயிரமாயிரம் போலி வாக்குறுதிகளை அஸ்திவாரமாகக் கொண்டு அமைக்கப்பட்ட அத்தாணி மண்டபம்தான் இன்றைய காங்கிரஸ் இயக்கம்!

தெருவிலே தேனும் பாலும் வெள்ளமென ஓடுமென்றார்கள், முன்பு!

தேனா ஓடிற்று? அதிகாரத் தேரின் கீழே அகப்பட்டு—அடக்குமுறை தர்பாருக்கு மார்பு காட்டி—மானம் காப்போர் சிந்திய இரத்தம் தான் ஆறாக ஓடிற்று!

தெருவிலே பாலா பெருக்கெடுத்தது? பால் வேண்டி அழும் பாலகர்களின் பிணங்கள்தான் அந்த ஆற்றிலே மிதக்கவிடப்பட்டன.

—இப்படிப் பல வடிவத்திலே-காங்கிரஸ்காரர்கள் காற்றிலே பறக்கவிட்ட வாக்குறுதிகளை நாம் கணக்கு காட்ட முடியும்; கமிட்டி ஏதுமில்லாமலே!

என்ன செய்வது!

ஆட்சி பீடம் ஏறியோர், தங்களைப் பதவி நாற்காலியில் ஒட்ட வைத்துக்கொள்ள இப்படித்தான் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத நிலைமையை உண்டாக்கிக் கொள்கிறார்கள்.

பதவி மோகம்; பொறுப்பற்ற தன்மை — இவைதான் அந்த நிலையை வளர்த்த எரு!

இந்த நேரத்திலேதான் இந்த வாரத்து அரசியல் நிகழ்ச்சிகள் நம் நினைவுக்கு வருகின்றன.

ஆந்திரா-சென்னை எல்லையில் தமிழகத்துடன் சேர்ந்துகொள்ளத் துடிக்கும் பிரதேசங்கள் குறித்து ஒரு முடிவு காண இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் ஆந்திர அரசுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி வெற்றிபெற எல்லா முயற்சிகளும் செய்வதாக அரசினர் அறிக்கை ஒன்று கூறுகிறது. நிதி அமைச்சர் சுப்ரமணியமும் இதே உறுதி மொழி தந்துள்ளாராம்.

இப்படி வாக்குறுதி தந்த அமைச்சர் சுப்ரமணியம் வேறு யாருமல்ல—நிறைவேற்றப் படாத வாக்குறுதிகள் 176 என்று புள்ளி விபரம் தயாரித்த 'வாக்குறுதிப் பரிசீலனைக் கமிட்டி'யிலே ஒரு அங்கத்தினர்தான்!

தமிழக எல்லை குறித்த இப்போது தரப்பட்டிருக்கும் வாக்குறுதி 'இருபத்தி இரண்டு'டன் சேரப் போகிறதா? அல்லது 'நூற்றி எழுபத்தி ஆறு'டன் சேரப் போகிறதா என்பது தெரியவில்லை. தமிழ் வழங்கும் பகுதிகள் தாய்த் தமிழகத்துடன் சேர்க்கப் படுவதில் நீதியும், நேர்மையும் இருப்பதாக உண்மையாகவே எண்ணுவோர், அரசாங்கம் தந்த இந்த வாக்குறுதியை மறந்துவிட மாட்டார்கள்.

வடக்கெல்லைப் பாதுகாப்பில் தி. மு. கழகம் தனது கருத்தை முதலிலேயே வெளியிட்டிருப்பதோடு, திருத்தணி கிளர்ச்சிகளின் போது பங்கேற்று, பல தி. மு. கழக வீரர்களை சிறைக் கோட்டத்திற்கும் அனுப்பியிருக்கிறது. அத்துடன், அண்மையில் நடைபெற்ற தேர்தலில் தி. மு. கழகப் பொதுச் செயலாளராயிருந்த அண்ணா அவர்கள், வடக்கெல்லைப் பாதுகாப்புக்குழுவின் அபேட்சகர்களுக்கே ஆதரவளித்து, "தி. மு. கழக மொழிவழி அரசுத் திட்டத்தின்படி தமிழ் அபேட்சகர்களுக்கு வெற்றி தேடித் தரவேண்டும்" என்று அறிக்கை விடுத்தார் என்பது யாவரும் அறிந்ததே! திராவிட நாடு எனும் பெரிய அணியில் நாளை நாம் ஒன்று சேருவதற்கு முன், மொழிவாரி அமைப்புகள் எனும் சிறிய அணிகளை இன்று செப்பனிட்டுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தின் வழியேதான் தமிழ்ப் பகுதிகள் தாய்த் தமிழகத்தோடு சேர வேண்டுமென்று நாம் கூறுகிறோம். தெலுங்கருக்கும் தமிழருக்கும் மோதுதல் ஏற்பட்டால், திராவிடநாடு எனும் தனி அரசு உருவாகத் தடை ஏற்படும் எனக் கருதிய வடநாட்டு சர்க்கார், முன்னேற்பாடாக செய்த சதிதான்; தமிழ்ப் பகுதிகளை ஆந்திரத்தோடு சேர்த்துப் பிரித்ததாகும்! அந்த சதிக்கு சாதகம் ஏற்படாத வகையில் தாய்த் தமிழகத்தோடு தமிழ்ப் பகுதிகள் இணைவதைத்தான் தி. மு. கழகம் விரும்புகிறது.

இந்த நிலையில், சென்னை சர்க்கார் தந்துள்ள வாக்குறுதி, உண்மையிலேயே நிறைவேற்றப்படப் போகிறதா? அல்லது மத்ய சர்க்காரின் சதித் திட்டம் நிறைவேற மேண்டு மென்பதற்காக, வழக்கம் போல் காற்றில் பறக்கவிடப்படப் போகிறதா?-என்பதை மக்கள் மன்றம் கவனித்துக் கொண்டுதானிருக்கிறது! இதுவும் 176 உடன் சேரப் போகிறதா? அல்லது 22 உடன் இணையப் போகிறதா?-என்பது நமக்கென்ன தெரியும்; ஆச்சாரியாரின் அருமந்த சீடர் அமைச்சர் சுப்பிரமணியனுக்கல்லவா தெரியும்!

★

One side page dark

# சங்காரம் நிசமென சங்கே முழங்கு!..

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி

மா? பெர்னாட்ஷா, ரஸ்ஸல், வெல்ஸ் போன்ற பேரறிஞர்களின் ிய எண்ணங்களை இந்த இரண் ்ம்கெட்டான் மொழியில் எடுத் ச்சொல்ல முடியுமா? பாராளு ன்றத்தில் ஆட்டம் போட்ட ந்தி வெறி, பள்ளிகளிலும் நாச ித்தனம் புரியட்டுமே என்ற நல் லெண்ணமா? வில்லும், புலியும், யலும் வீணருக்கு என்றுமே ணிந்ததில்லை.

# தூங்குதல் போன்றது சாக்காடு!

"இப்புவி தோன்றிய நாள்
முதலாய்—எங்கள்
இன்பத் தமிழ்மொழி உண்டு
காண்பீர்
தப்பிழைத்தோர் இங்கு வாழ்ந்த
தில்லை—இந்தத்
தான்தோன்றிகட்கென்ன
ஆணவமோ!"

கட்கத்தானே செய்வர் தமிழ் க்கள்.

★

இரண்டாவது ஐந்தாண்டுகளில் ியோர் கல்வி இந்தியில் நடை றுமாம். அதற்குள், அதாவது தல் ஐந்தாண்டுகளில் மாணவர் ள் இந்திப் பண்டிதர்களாக ஆகி வார்களென சர்க்கார் கணக் போடுகிறது படிக்கின்ற ணவர்கள் மக்கள் தொகையில் த்தனை சதவிகிதம்; அவர்களில் யில் தேர்ச்சி பெறுவோர் த்தனை சதவிகிதம் தேர்ச்சி பெற் ில் முதியோருக்குக் கல்வி ாதிக்கும் மனப்பக்குவம் பெற் ர் எத்தனை பேர்? இதையெல் ம் எண்ணிப் பார்க்க வேண் டாமா? கடந்த பல ஆண்டுகளா த் தாய்மொழியாகிய தமிழில் ந்த முதியோர் கல்வி நடந்ததே ன் என்ன? 'மெயில்' பத்திரி கயின் ஆசிரியராக இருந்த ாலஞ் சென்ற ஹேய்ல்ஸ், இந்த ியோர் கல்வி நடக்கும் பள்ளி ளின் எண்ணிக்கை, படிப் பாரின் எண்ணிக்கை, படிப்பி ல் பலன் பெற்றோரின் எண் ிக்கை ஆகியவற்றை மாவட்ட வாரியாக வெளியிடும்படி பல றை சவால் விட்டுக் கேட்டா ் புள்ளிவிவரம் கொடுக்க வக் லாமல் அரசாங்கம் பின்வாங் யதேன்? தாய்மொழியில் முதி ோர் கல்வியே இந்தக் கதியா ், இந்தியில் அது எந்த அள க்கு வெற்றியடையும்? ஆகவே த்திய கல்வி இலாகாவின் இத் ிட்டம் வெற்றியடையும் என்று ாராவது கூறமுடியுமா? மத்திய அரசாங்கத்தின் இத்திட்டம் நரி யைப் பரியாகவும், பூனையை யானை ாகவும், குருபியைக் கோமள ல்லியாகவும் காட்டும் முயற்சி. டவனை மைல் ஓட்டப் பந்தய ்ன் ரோஜர் பானிஸ்டரோடு போட்டிக்கு விடும் முயற்சி-ஆங்கி த்தின் இடத்தை இந்திக்கு அளிக்கும் திட்டத்தின் மூன்று து பகுதி. பாராளும் மொழி, ன்பு வளர்க்கும் மொழி, இலக் யத்தை எல்லையில்லாமல் வளர்த் ் கொண்டிருக்கும் மொழி, ிஞானக் கலைக்கே வேராக அமைந்துள்ள மொழி—ஆங்கிலம்! தனிடத்தை இந்திக்கு அளிக்க யலும் அறிவு சூன்யங்களின் ாழிப்பித்தை என்னென்பது? ந்த முயற்சி கருவிலேயே தன்

னைத்தானே அழித்துக் கொள்ளும் தன்மையது! செயற்கை சுவாச முறை எத்தனை நாள் இந்திக்கு உயிரளிக்கும்? அப்படியானுல் இந்தி வெறியர்கள் காரணமில்லாமலா இந்த அடிமைச் சாசனத்தைத் தயாரித்தார்கள்? திட்டத்தின் அடிப்படையிலுள்ள ஏகாதிபத்தியத்துக்கான காரணங்களாவன:

(1) ஒரு நாட்டை அடிமைப் படுத்தி இன்னொரு நாடு சுரண்டுவதற்கு, ஆத்மீகம், கலை, நாகரிகம் ஆகிய துறைகளில் மக்களின் மனத்தை அடிமை கொள்ளுவது ஒரு முறை. இம்முயற்சிக்கு மொழி ஒரு சிறந்த சாதனம். சரித்திர வல்லுநர்களான வடநாட்டு முன்ஷி, கட்ஜு, பந்த் போன்ற வடநாட்டுத் தலைவர்கள் இதனை நன்குணர்ந்திருக்கிறார்கள்.

(2) உலகிலேயே ஆங்கில மொழியைச் செம்மையுறப் பேசுவதிலும் எழுதுவதிலும் ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண்டவர்களுக்கு அடுத்த படியாக தென்னாட்டவரே சிறந்து விளங்குகின்றனர் என்பது மேல் நாட்டு மொழியறிஞர்கள் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட உண்மை. இந்தியாவில் அரசியல் துறையில் தலைமைப் பதவிக்கு மொழிவழியினங்கள் போட்டியிடும்போது, அறிவுக் கூர்மையும் ஆங்கில மொழியில் சிறப்பான பயிற்சியும் கொண்ட தென்னாட்டவர் வடநாட்டுத் தலைவர்களை மிஞ்சிவிடுவார்கள் என்ற பயத்தினுல், இந்தியைத் திணித்து ஆங்கிலத்தை ஒழித்து ஒரே கல்லினுல் இரண்டு கனிகளை விழ்த்தப் பார்க்கின்றனர், வடவர். பண்டித நேரு அகில உலகப் புகழ் ஏணியில் ஏறுவதற்கான படிகளை அமைத்துக் கொடுப்பவர் கிருஷ்ணமேனன் என்ற தென்னாட்டவர் என்பதையும், நேருவின் சகோதரி விஜயலட்சுமி மாஸ்கோவில் தூதராக இருந்த பொழுது அவருக்குப் பேட்டியளிக்க மறுத்த ஸ்டாலின், தென்னாட்டவரான இராதாகிருஷ்ணன் (இப்பொழுது குடியரசின் துணைத் தலைவர்) அங்கு தூதராக இருந்த பொழுது, இருமுறை அவரைச் சந்தித்து உலக அரசியல் பற்றி மனம் விட்டு விவாதித்தார் என்பதும் குறிப்பிடத் தக்கது. அகில உலக அரங்கில் நேருவுக்கு அடுத்த படியாகக் கிருஷ்ண மேனன் இந்திய அரசியல் மேதையாக மதிக்கப் படுகிறார் என்பதையும், சமீபத்தில் நியூயார்க் பத்திரிகையாளர் கழகத்தில் வேறெந்த வெளிநாட்டுத் தலைவருக்கும் அளிக்கப் படாத வகையில் நிருபர்கள் அவருக்கு வரவேற்பளித்து, அவருடைய அரசியல் ஆய்வுரையைக் கருத்தோடு கேட்டு மகிழ்ந்தனர் என்பதும் சிந்தனைக்குரியது. கிருஷ்ணமேனனை மந்திரியாக்க நேருவே விரும்பியும், அந்த முயற்சிக்கு வடநாட்டுத் தலைவர்களான பந்த், ஆசாத் போன்றோரே எதிர்ப்புக் காட்டி வருகின்றனர். நேருவின் வெளிநாட்டிலாகாவின் மூலபலமாக விளங்குவதே தென்

# உயிர் தித்திப்பை எண்ணிடப் போவதில்லை!

னாட்டு சிவிலியன்கள் (ஐ. சி. எஸ். உத்தியோகஸ்தர்கள்)தான்.

(3) மொழி பயிலும் ஆற்றல் படைத்த தென்னாட்டவர் ஓரளவுக்காவது இந்தி பயின்று விட்டால், ஆங்கிலேயர் செய்தது போல், அவர்களை நிர்வாகத்திற்கு கங்காணிகளாய் ஆக்கிக் கொள்ளலாமென்பது.

தனி நாடு கோரும் திராவிடர், இந்திப் பிரச்சினையை வெறும் மொழிப் பிரச்சினையாக மட்டும் கருதவில்லை. அரசியல் பிரச்சினையாகவே கருதுகின்றனர். நாம் வேறு; அவர்கள் வேறு—நாம் இனவழி ஒரு நாடு. வேற்றூர், நாம் அவர்களுக்குப் போற்றி அகவல் பாட வேண்டும் என்று கருதி, இந்தியைத் திணித்தால்,

"சிங்கமென்ற இளங் காளை
களே—மிகத்
தீவிரங் கொள்ளுவீர் நாட்டி
னிலே!
பங்கம் விளைத்திடில் தாய்
மொழிக்கே—உடற்
பச்சை ரத்தம் பறிமாறிடு
வோம்!"

என்று படை திரட்டிப் பாசறை அமைக்கத் திராவிடர் தயங்க மாட்டார்கள். இந்திப் பிரச்சினை திராவிடருடைய — அவர் காங்கிரஸ்காரராக இருப்பினும், கம்யூனிஸ்டாக இருப்பினும்—வாழ்வை பாதிக்கும் பிரச்சினை இந்தி மொழியின் இடம் பற்றி அடிப்படையிலே நம்மோடு மாறுபாடு கொண்டவரும், நாட்டுப் பிரிவினை விஷயத்தில் நம்முடைய எதிரியுமான காமராசர், தன் ஆட்சியும் கட்சியும் ஆட்டம் கொடுக்காதவாறு பார்த்துக்கொள்ளமட்டும் தேவையானபடி வெளியிட்டிருக்கும் அறிக்கையைக் கொண்டு — அதிலும் சாதகமானது ஏதாவது இருக்றதா என்று தேடிப் பார்த்து, ஏதோ இருப்பதாக திருப்திக்காகக் கற்பனை செய்து கொண்டு மகிழ்வது, நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டதாக முடியும். காமராசருடைய அறிக்கையை எண்ணி, தோழர்கள் மகிழ்கின்ற நேரத்திலேதான் கனம் சுப்பிரமணியம் சட்டசபையில் கீழ்க்கண்டவாறு பேசியிருக்கிறார்:

"இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி என்ற பெயரில் தமிழ் நாட்டில் இப்பொழுது ஏதேதோ நடந்ததே, அதற்கு முன்பாகவே நாங்கள் மத்திய அரசாங்கத்தை இந்தி விஷயத்தில் சற்று நிதானமாகப் போகும்படி கூறிவிட்டோம். ஆகவே, எங்களின் இந்தத் திர்மானத்தை சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக்கொண்டு, ஒரு சிலர் தாங்கள் ஏதோ லட்சியத்துக்குப் போராடிய வீரர்களாக விளம்பரப் படுத்திக் கொண்டால், அவர்களைப் புறக்கணித்து விடுவதுதான் நமக்குள்ள ஒரே வழி."—('மெயில்' பத்திரிகையின் ரிப்போர்ட்)

மந்திரியாரின் சட்டசபைப் பேச்சு இது! பேசியது விபீஷண சுப்பிரமணியம்தானே: வாக்குறுதி கொடுத்தது பச்சைத் தமிழர் காமராசரல்லவா என்று தோழர்கள் வாதிடக் கூடும். சர்க்காரின் குரலாக சட்டசபையில் மந்திரி பேசியிருக்கிறார் என்பதும், மந்திரிசபை கூட்டுப் பொறுப்பு உடையது என்பதும் மறப்பதற்கில்லை. பாராளும் மன்றத்தில் பந்த் வீசிய வசைச் சொற்கள், அவ்வளவு சுலபத்தில் துடைத்துவிடக்கூடியதா?

★

இந்தி எதிர்ப்புப் போரைப் பொறுத்தமட்டில் நாம் வெற்றி விழா கொண்டாடும் நாளொன்று உண்டு. அன்று நாம் அரசாங்க அறிக்கைக்காக காத்திருக்க மாட்டோம். நமக்கென்ற அறிவிப்புடனேயே — நமக்காகவே— அரசாங்கம் ஆதார பூர்வமான அறிக்கைகள் வெளியிடும். அன்று சட்டசபையில் மந்திரிகள் ஏகடியம் பேச மாட்டார்கள்--பேச அவர்கள் அங்கே இருக்க மாட்டார்கள். அப்பொழுது இரயில் பலகைகளில் இந்தி எழுத்துக்கள் நம்மைப் பார்த்து சிரிக்காது; முக்காலணு கார்டில் காலணு இடத்தை இந்தி எழுத்துக்கள் அடைத்திருக்காது. இஷ்டப் பாடம் என்ற போர்வையில் இந்தி கட்டாயப் பாடமாக பள்ளிகளில் பவனி வராது. திராவிடர்கள்— வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் வெற்றித் தோள் கொண்டோர்,

"தூங்குதல் போன்றது சாக்
காடு—பின்னர்
தூங்கி விழிப்பது நம் பிறப்புத்
தீங்குள்ள இந்தியை எதிர்ப்
போம்—உயிர்
தித்திப்பை எண்ணிடப் போவ
தில்லை"

என்று சங்கம் முழங்குவர். படை கிளம்பும்; பாசறை அமையும்! அரசாங்கம் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடும். பள்ளுப் பாடி களம் செல்வர் காளையரும், கன்னியரும்!

"மாங்குயில் கூவிடும்பூஞ்சோலை
—நமை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை!
ஏங்க விடோம் தமிழ்த் தாய்
தனையே—உயிர்
இவ்வுடலை விட்டு நீங்கும்
வரை!"

சிந்துபாடி சிறை உள்ளே நுழைவர் திராவிடத் தங்கங்கள். அதுவே வெற்றி நாள்! இனப் போரில் வாகை சூடும் நாள்! இந்திப் போராகத் துவங்கும் அறப்போர், இன விடுதலையின் இறுதிப் போராக அமையும் நாள்! காத்திருப்போம், அந் நந் நாள் காண!

—(டெமாஸ்தனீஸ்)

# ஒரு துளி இரத்தம்!

நெஞ்சிலே கொழுந்துவிட்டெரிந்த வேதனைத் தீயை அணைக்க முயன்றான்; தோல்வி கண்டான்; முடிவில் அந்தத் தீயிலேயே கருகிப் போனான். பாவம், அந்தப் பரிதாபத்திற் குரியவனின் வாழ்வைக் குடித்ததோ... 'ஒரு துளி இரத்தம்!' — அந்தப் பயங்கரத் திரைக்குப் பின்னால் மறைந்து கிடந்தது ஒரு சோக காவியம்...




என்றும் போல், அன்றும் என் வைத்திய சாலையை முற்றுகையிட்டிருந்த வியாதிஸ்தர்களைப் பரிசோதித்துக் கொண்டிருந்தேன். வெளியிலே "டாக்டரை உடனே பார்க்க வேண்டும்; மிகவும் அவசரம்" என்று சப்தமிட்டுக் கொண்டிருந்தார் ஒருவர். தொடர்ந்தார் போல் அவரின் சப்தம் என்னைக் கவர்ந்ததால், அவரை உடனே உள்ளே அனுமதிக்கும்படிக் கட்டளையிட்டேன். அவரும் உள்ளே நுழைந்தார். நடை, உடையிலிருந்து அவர் பெரிய இடத்துப் பிள்ளையாகத்தான் இருக்க வேண்டும் என்றும் ஊகித்தேன். அழகிய முகத்திலே கவலையின் ரேகைகள்; ஒளி சிந்தும் விழிகளிலே வேதனையும், வாட்டமும் சதிராடின; இளமையை எடுத்துச் சொல்லும் அரும்பு மீசை; வலது கையிலே துணியால் ஒரு கட்டுப் போட்டிருந்தார். வேதனையால் உதடுகள் துடித்துக் கொண்டிருந்தன. நான் பேசுவதற்கு முன்னே அவர் பேச ஆரம்பித்தார்:

"டாக்டர்! ஒரு வார காலமாக நான் தூங்கவே முடியவில்லை. விழிகள் மூட மறுக்கின்றன. வலியின் வேதனையால். என் வலதுகையில் ஏதோ ஒரு வலி எடுக்கிறது. அது 'கேன்ச'ராக இருக்கலாம்; அல்லது புதுவியாதிகளில் ஒன்றாக இருக்கலாம். இப்பொழுதுதான் புதுப்புது வியாதிகள் திடீர் திடீரென்று தோன்றுகின்றனவே! வலியை என்னால் பொறுக்கவேமுடியவில்லை. வலியின் உபாதையைப் போக்க, தற்கொலைகூட செய்து கொள்ளலாமாஎன்று என் சிந்தனை ஓடுகிறது. உடனே கவனியுங்கள். வலி எடுக்கும் இடத்தை தீய்த்து விடுங்கள்; அல்லது வெட்டி எடுத்து விடுங்கள்; எது வேண்டுமானாலும் செய்யுங்கள். என் வலி உடனே நிற்க வேண்டும்; இல்லாவிட்டால் இவ்வுலகில் நான் 'நிற்க' முடியாது. டாக்டர்..." என்று கூறிக்கொண்டே வலது கையில் கட்டியிருந்த கட்டைப் பிரித்தார்.

"கண்ணுக்குத் தெரியும் புண் எதுவுமில்லை டாக்டர். ஏதோ புதுமையான வியாதி!" என்றார்.

"வலிக்கும் இடத்தைக் காட்டுங்கள்" என்றேன் நான். வலது கையின் மணிக்கட்டுக்குக் கீழ் ஒரு வட்டமான இடத்தைக் காட்டினார். அதை நான் தொட்டவுடன்—மிகவும் மெதுவாகத்தான் தொட்டேன்—'வீல்' என்று கத்த ஆரம்பித்துவிட்டார்.

"வலி பொறுக்க முடியவில்லை டாக்டர்...வலி பொறுக்க முடியவில்லை"

"நான் தொட்ட உணர்ச்சி உங்களுக்குத் தெரிந்ததா?"

அவர் பேசவில்லை. நீர் நிரம்பிய அவரின் நயனங்கள் அதை சொல்லிற்று. அவர் சொன்ன இடத்தை கூர்மையாக பரிசோதித்தேன். ஒன்றுமே தெரியவில்லை. வீக்கமோ அல்லது வர்ண மாற்றமோ கிடையாது. கையின் மற்ற பாகத்தைப் போலவே அந்த இடமும் இருந்தது. ஆனால், அவர் வலியின் தொல்லையால் எல்லையில்லா அல்லல் படுகிறார் என்பதை அவரின் முகம் சொல்லாமல் சொல்லிற்று.

"உங்களுடைய தோல் நல்ல வலிவுற்றிருக்கிறது. நரம்புகள் எல்லாம் நன்றாகவே உள்ளன. எந்தவிதமான வியாதியின் அறிகுறியும் தென்படவில்லையே!" என்றேன் நான்.

"டாக்டர், இந்த இடம் மற்ற இடங்களைவிட சிறிது சிகப்பாக இருக்கிறதல்லவா?" என்று கூறிக் கொண்டே காலணா அளவுக்கு வட்டமான இடத்தை—வலிப்பதாகக் கூறிய இடத்தை சுட்டிக் காட்டினார். ஆனால் அந்த இடமும் கையின் மற்ற இடங்களைப் போலவேதான் இருந்தது. காலையில் ஒரு 'பைத்திய'த்திடம் சிக்கிக் கொண்டோமே என்று நினைக்கலானேன். அகத்தில் எழுந்த சிந்தனையை முகத்தில் தெரிந்து கொண்டார் போலும்.

"டாக்டர்! நான் பித்தனுமல்ல; எத்தனுமல்ல! கண்ணுக்குத் தெரியாமல் இருக்கின்ற புண் என்னை வாட்டி வதைக்கிறது. அந்த வட்டவடிவமான இடத்தை வெட்டி விடுங்கள், டாக்டர். என் வலியின் தொல்லை நீங்கி விடும்."

"என்னால் முடியாது. அவசியம் இல்லாமல் என் கத்தியை உபயோகிக்க மாட்டேன்"

"பைத்தியக்கார விடுதியில் இருக்க வேண்டியவன், வைத்திய சாலைக்கு ஓடி வந்துவிட்டான் என்று வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளுங்கள். என் வலி நீங்க ஒரே வழி, அந்த இடத்தில் உள்ள 'சதை'யை வெட்டி எடுத்துவிடுங்கள்...பணத்தைத் தங்களின் பாதங்களில் கொட்டுகிறேன் — தங்கத்தால் அர்ச்சிக்கிறேன்" என்று கூறிக்கொண்டே பணக் கத்தைகளை தன் பையிலிருந்து எடுத்து மேஜைமேல் எறிந்தார், அந்தப் பரிதாபத்திற்குரியவர்.

"பணத்தைக் கண்டு பல்லிளிக்கும் டாக்டர் அல்ல நான். பணத்தால் என்னை அடிமையாக்கிக் கொள்ளலாம் என்று எண்ணாதே!" சற்று கோபமாகவே பேசினேன்.

"டாக்டர், நீங்கள் உதவாவிட்டால், நான் ஒரு துளி விஷத்தின் உதவியைத்தான் நாட வேண்டும். என்னால் இந்த வலியைத் தாங்கிக்கொள்ள முடியாது. என் நம்பிக்கையை நாசமாக்கி விடாதீர்கள்...என் வாழ்வும் நாசமாகி விடும்... மரணத்தின் மடியைத் தேடி ஓடத்தான் வேண்டும்..." —அவரின் விழிகள் நதிகளாயின.

"அந்த வட்டவடிவமான இடத்தை வெட்டி சதையை எடுத்துவிட்டால், உங்களின் வலி தீர்ந்துவிடும் என நம்புகிறீர்களா?"

"ஆமாம்; டாக்டர்"—ஏக்கத்தோடு பதிலளித்தார்.

"சரி, உங்கள்நம்பிக்கைபடியே செய்கிறேன்!" என்றேன் நான். மகிழ்ச்சி அவரின் சோர்ந்த முகத்தையும் சோபிக்கச் செய்தது.

இந்த விசித்திர வியாதி விடுவிக்க முடியாத விடுகதையாக-புரியாத புதிராக இருந்தது எனக்கும். ஆகவே அவரின் நம்பிக்கையையே ஆதாரமாகக் கொண்டு 'ஆபரேஷன்' செய்யத் தயாரானேன். வலி எடுக்காமலிருக்க மறத்துப் போகும் மருந்தைத் தடவப் போனேன்.

"டாக்டர். வேண்டாம்! நான்படும் அவஸ்தையைவிட, நீங்கள் கத்தியால் கீறும் வலி குறைவாகத் தான் இருக்கும். விரைவில் உங்கள் வேலையை ஆரம்பியுங்கள்" என்றார்.

அவர் காட்டிய அந்த வட்ட வடிவமான பாகத்தை கத்தியால் வெட்டியபோதுகூட அவர் முகம் சுளிக்கவில்லை. இரத்தம் பீறிட்டுச் சிதறிய போதும் அவரின் சிந்தை கலங்கவில்லை. உண்மையிலேயே ஆச்சரியமாகவும், அவிழ்க்க முடியாத முடிச்சாகவும் இருந்தது. சதையை வெட்டிய இடத்தில் மருந்து வைத்துக் கட்டினேன்.

"டாக்டர்! உங்களுக்கு எப்படி நன்றி செலுத்துவதென்றே தெரியவில்லை; வலி பறந்துவிட்டது!" என்றார்.

நான் பேசவில்லை. பேச முடியவில்லை. ஒரு வாரம் என் வைத்திய சாலையிலே தங்கி, ஆபரேஷன் செய்த இடம் குணமான பிறகு அவரது கிராமத்துக்குச்சென்றார். அவர் பக்கத்திலே உள்ள ஐவ்வாது மலையின் ஜமீன்தாரென்றும், அவர்பெயர் 'மோகன்' என்றும் அறியலானேன்.

நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. ஒரு வாரம் கழித்து மீண்டும் வந்தார். அதே இடத்தில் அதே வலி! முன் போலவே அந்த விசித்திரமும் வேதனையும் நிரம்பிய வட்டவடிவமான இடத்தை வெட்டி எடுத்தேன். அவரும் இதழ் ஓரத்தில் புன்னகையை தவழவிட்டுச் சென்றார்.

நாட்கள் வாரங்களாகவும், பின் மாதங்களாகவும் மாறி ஓடின. இரண்டு மாதங்கள் சிறகடித்துப் பறந்தன. மோகன் திரும்பி வரவில்லை. நானும் அவரை மறக்கலானேன்.

திடீரென்று ஒருநாள் அவரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அந்த விசித்திர வியாதியின் புதிரும் அவிழ்ந்தது.

*

அன்புள்ள டாக்டர்,

இரண்டு மாத காலமாகத் தங்களை நாடி வராததால், என் வியாதியும் பறந்து ஓடியிருக்கும் என்று எண்ணியிருப்பீர்கள். என் எண்ணங்கள் எல்லாம் மண்ணாகிப் போனது போலவே, உங்கள் ஆசையும் நிராசையாகிவிட்டது. இரண்டாம் முறையாக சிகிச்சை பெற்று ஊர் திரும்பியவுடன், என் வேதனையும்திரும்பிவந்துவிட்டது. வலி எடுக்கும் கையுடனேதான் இதனை வரைகிறேன், நான் மறைவதற்குள் என் வியாதியின் உண்மையை நீங்கள் உணர வேண்டும் என்ற ஆசையால். இன்னும் சில மணி நேரங்களில் மரணத்தைத் தழுவப் போகிற நான், என் இரகசியத்தை கூறப்போகிறேன். என் சவக்குழியை நானே வெட்டிக் கொண்டேன். என்னுடைய இரகசியத்தை என்னுடனே சுமந்து செல்ல விரும்பவில்லை. அணுஅணுவாக சாக அடிக்கும் அந்த வலியின்வேதனைக்கு.மரணத்தை முத்தமிட்டு முடிவுரைஎழுதப் போகிறேன். வாழ்க்கை ஏட்டில் இன்பக்காவியம் தீட்டவேண்டிய நான்...உல்லாசபுரியில் சல்லாபம் செய்ய வேண்டிய நான்...வாழ்க்கையின் இன்பத்தை நுகர வேண்டிய வானம்பாடி சாவூரைத் தஞ்சம் புகப் போகிறது. சாகப் போகிற என் சோகக் கதையைக் கேளுங்கள், டாக்டர்.

ஆறு மாதத்திற்கு முன்பு என்னைப் போல அதிர்ஷ்டசாலி இவ்வையகத்தில் யாரும் இல்லையென்று இறுமாந்திருந்தேன். என் கர்வம், இறுமாப்பு எல்லாம் தூளாகிவிட்டது. ஆசைக் கனவெல்லாம் கனவாகவே போய் விட்டது. எழுப்பிய எழில் மாடங்கள் எல்லாம் பாழ்! பாழ்! என் வாழ்வே பாழாகி விட்டது! காலமெல்லாம் காதலித்த காரிகையோடு ஞாலத்தில் வாழலாமென்றிருந்த என் ஆசை, கானல் நீராகி விட்டது.

செல்வக்குடியில் பிறந்தேன்—சீமானாக வாழ்ந்தேன்—சிந்தையில் குடியேறியவளையே மணந்தேன்-இன்று சிந்துவாரற்று சாகப்போகிறேன்! சென்ற ஆண்டுதான் என் நெஞ்சிக்கினியவளை மணந்தேன். காதல் மணம் தான்! 'முற்றும் பெறாத—நிறைவேறாத காதல் தான் சாதலில் முடிவடையும்' என்பதைக் காவியத்திலே, கவிதையிலே படித்திருக்கிறேன். 'காதல், காதல்' எனக் கதறி, அது நிறைவேறாததால் ஆற்றின் வெள்ளத்தையும்-ஒரு முழக் கயிற்றையும்-ஒரு துளி விஷத்தையும் தஞ்சம்

○ தொடர்ச்சி 8-ம் பக்கம்

# புதையல்

மு. கருணாநிதி

**நிலைமை**

துக்காராம் போலீசாரால் கொண்டு போகப் பட்டிருக்கிறான். துரை வெள்ளியம்பலத்தின் கையில் சிக்கி யிருக்கிறான். விடுதலை பெற்ற பரிமளா, மாயாண்டிக் கிழவருடன் துரையைத் தேடி மனோரா வுக்குப் போக, அங்கே துரையின் நண்பர்கள் கட்டுண்டு கிடக்கிறார்கள்.

## 37

## அவள்....?

எல்லோரின் கட்டுகளையும் கிழவர் அவிழ்த்து விட்டார். அவர்களும் பெருமூச்சோடு எழுந்தார்கள். ஓரிருவர் பலத்த காயத்தோடு வருந்திக் கொண்டிருந்தார்கள். "துரை எங்கே?" என்று கிழவர் மீண்டும் கேட்டார் ஆவலாக! துரை வெள்ளியம்பலத்தின் கையிலே சிக்கிவிட்ட செய்தியைச் சொன்னார்கள். பரிமளாவுக்கு புதிய கவலை வந்து சேர்ந்தது. கிழவரும் அதிர்ச்சி அடைந்தார். பரிமளா, வெள்ளியம்பலம்—துரையை எதற்காகக் கொண்டு சென்றிருக்க வேண்டும் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டாள். புதையலைப் பற்றி துரையிடம் ரகசியம் சேகரிப்பதற்கான ஏற்பாடு என்பது அவளுக்கு நன்றாக விளங்கிவிட்டது. அவள், மாயாண்டிக் கிழவரிடம் வெள்ளியம்பலத்தின் சூழ்ச்சித் திட்டங்கள் அத்தனையையும் விரிவாகக் கூறத் தொடங்கினாள். தன்னை மனோராவுக்குத் தூக்கி வந்தது முதல், ஆற்றங்கரையிலே மீண்டும் சந்தித்து, வாய்க்கால் ஓரத்து பங்களாவில் ஒளித்து வைத்திருந்தது வரை—துக்காராம் சிக்கிய பரிதாபம் உள்ளிட்ட எல்லாக் கொடிய சம்பவங்களையும் கிழவரிடம் பரிமளா வர்ணித்தாள்.

கிழவர், வெள்ளியம்பலத்தின் காட்டுராஜா தர்பார்களைக் கேள்விப் பட்டிருக்கிறார் என்றாலும், இவ்வளவு பெரும் சூழ்ச்சிகள் புரிவதில் வல்லவன் என்று அவர் கேள்விப் பட்டதில்லை. அதனால் பரிமளா சொன்ன நிகழ்ச்சிகளை ஆச்சரியத்தோடு கேட்டார். நிகழ்ச்சிகளை விவரித்த பரிமளா, இடை யிடையே துக்காராமை எப்படியும் நாம் விடுவித்தாக வேண்டும் என்பதையும் வலியுறுத்திக் கூறிடத் தவறவில்லை 'முதலில் துரையை விடுவிக்க வேண்டும். பிறகுதான் துக்காராம் விஷயம் கவனிக்கப்படும்' என்று கிழவர் பதில் கூறிவிட்டு, கடற்கரை மணற் பரப்பில் ஆழ்ந்த யோசனையோடு உலவத் தொடங்கினார். கடலிலும், அவர் உள்ளத்திலும் அலைகள் போட்டி போட்டுக் கொண்டு ஓலமிட்டன. தான் செல்லும் பாதையிலே எப்படியெப்படியெல்லாம் சந்தர்ப்பங்களை சந்திக்க வேண்டியதாகி விட்டது என்கிற எண்ணத்தின் அடையாளமாகத்தான் போலும், அவ்வளவு ஆழமான பெருமூச்சு கிளம்பியது அவருக்கு!

பரிமளாவும் திசை தெரியாத கலம் போல கடல் மணலில் அமர்ந்திருந்தாள். துரையின் நண்பர்களில் ஒருவனான ஆனந்தன் என்பவன் மட்டும் அங்கே நிலவிய மௌனத்தைக் கலைக்க விரும்பினான்.

"இங்கேயே உட்கார்ந்திருந்தால் என்ன நடக்கும்? மேலே ஆக வேண்டியதைப் பார்க்கலாம்!" என்று ஆரம்பித்தான் அவன்.

கிழவரும், "ஆமாம்; அதுதான் சரி - ஆனந்தா! நீ போய் ஒரு தோணி கொண்டு வா! அனைவரும் புதுப்பட்டினம் போகலாம்" என்றார்.

"புதுப்பட்டினமா? அப்படியானால் அத்தானின் கதி?" என்று ஆயாசத்தோடு வினவினாள் பரிமளா. அவள் கண்களிலே கிளம்பிய நீரூற்றை யாரும் கவனிக்க இயலவில்லை. நேரம் அப்படி!

"கேள் பரிமளா! இங்கேயே இருந்து துரையை மீட்பதென்றால் முடிகிற காரியமா? எல்லோரும் புதுப்பட்டினம் போவோம். நமது ஆனந்தன் வீட்டில் நீ தங்கிக் கொள். துரையின் வீட்டுக்கு நீ வரக்கூடாது. ஒரு சமயம் துப்பு விசாரிக்க வரும் போலீசார் கண்ணில் பட்டுவிடுவாய். பிறகு தாண்டவன் வந்துவிடுவான். அதனால் ஆனந்தன் வீடுதான் பொருத்தமானது. துரையை விடுவிப்பது எப்படி என்பது பற்றி நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன். அதை விபரமாகக் காலையில் சொல்லுகிறேன். இப்போது நாமெல்லாம் இங்கிருந்து புறப்படுவதே நல்லது!" என்று கிழவர் கூறவே, ஆனந்தன், தோணி ஏற்பாடு செய்யக் கிளம்பினான்.

★

துரையை விடுவிக்க கிழவரும், பரிமளாவும், நண்பர்களும் இங்கே யோசித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில்தான், வெள்ளியம்பலம், பரிமளா ஓடிவிட்ட செய்தியை அறிந்து துடித்துப் போனார். வேலைக்கார ராமனுக்கு சரியான 'பூசை' நடைபெற்றது. வண்டியிலே கட்டுண்டு கிடக்கும் துரையை வாய்க்கால் ஓர பங்களாவிலே அடைத்து வைப்பது ஆபத்து என்று அம்பலம் புரிந்து கொண்டார். வெளியேறிவிட்ட பரிமளா, ஒருவேளை பங்களா ரகசியத்தை வெளியிட்டுவிடக்கூடும் என்று பயந்தார். அதனால், துரையை தனது வீட்டிலேயே அடைத்துவைக்க முடிவு செய்து, வண்டியை வீட்டுக்கு ஓட்டச் செய்தார்.

மருங்கப்பள்ளம் கிராமத்திலே வெள்ளியம்பலத்தின் வீடுதான் பெரிய வீடு. இரண்டு மூன்று கட்டுக்கள் உள்ள அந்த வீட்டிலே துரை ஒரு கைதி போல அழைத்துச் செல்லப்பட்டான். இரண்டாம் கட்டிலேயுள்ள ஒரு பெரிய அறை திறக்கப்பட்டது. அதற்குள்ளே துரை தள்ளப்பட்டான். ஆட்கள் அனைவரும் அம்பலத்தை வணங்கிவிட்டு அதைவிட்டு அகன்றார்கள். அம்பலம் ஒரு அசட்டுச் சிரிப்புடன் கனைத்துக் கொண்டு துரையின் எதிரே போனார்.

"எழுவானுக்குத் தொழுவானுக்கும் இடையிலே...
காக்கை மூக்கு நிழலிலே ..
கள்வர் புகும் வழியிலே...
கண்டாலும் 'கர்மாளர்' கண்ணிலே...
எழுபது கோடி பசும்பொன்... "

துரை, ஆத்திரத்தை அடக்க முடியாமல் அவரைப் பார்த்து, "இந்த அநியாய மெல்லாம் எதற்காக? ஏன் என்னை இப்படி சித்ரவதை செய்கிறீர்கள்?" என்று கேட்டான். அதற்கு வெள்ளியம்பலம் சிரித்துக் கொண்டே, "எல்லாம் காரியமாகத்தான்! தூங்கு இப்போது! காலையில் பேசிக் கொள்வோம்" என்று அதை விட்டு நகர ஆரம்பித்தார்.

"இல்லை. இப்போதே சொல்லுங்கள்! ஏன் இந்தக் கொடுமை? என் பரிமளா எங்கே?" என்று ஆவலைக் கொட்டினான் துரை.

"பரிமளா பத்திரமாக இருக்கிறாள். பையா! பரிமளாவை நீ பார்க்க வேண்டுமானால் — ஒரு சிறிய நிபந்தனை இருக்கிறது!"

"என்ன நிபந்தனை?"

"அந்த ரகசியத்தை என்னிடம் தரவேண்டும்!"

"எந்த ரகசியத்தை?"

"புதையல் ரகசியத்தை!"

"ஆ...!"

"சாமியாரிடமிருந்து நீயும் மாயாண்டியும் அபகரித்தீர்களே: அந்தப் புதையல் ரகசியத்தை என்னிடம் தந்தால் நீயும் பரிமளாவும் விடுதலை பெறலாம்"

"பொய்! சாமியாரிடம் புதையல் ரகசியம் அபகரித்தோமா? இல்லவே இல்லை!"

"மறைக்காதே! மண்டை நொறுங்கும்!" என்று கூறியபடி துரையின் தலையிலே ஓங்கி அறைந்தார் அம்பலம். கட்டப்பட்டு நிற்கும் துரைக்கு அதைப் பொறுக்க முடியவில்லை. தன்னுடைய கால்களால் அம்பலத்தை எட்டி உதைத்தான். அம்பலம் சீறும் புலியானார். 'பளார்! பளார்!' என்று பல முறை அவன் கன்னத்திலே பலங்கொண்ட மட்டும் அறைந்தார். அவரது முரட்டுக் கரத்திலே திருக்கைவால் சாட்டையும் ஏறி விட்டது. அதை ஓங்கிய படியே துரையை அதட்டிக் கேட்டார்;

"புதையல் ரகசியம் தரப்போகிறாயா? இல்லையா?" என்று!

அவனோ எதுவும் பேசாமல் நின்றுகொண்டிருந்தான்.

"பதில் சொல்லடா மடையா!" என்ற பயங்கரக் குரலும், திருக்கை வால் அடியும் மாறி மாறி ஒலிக்கத் தொடங்கின. துரை, 'அம்மா! அப்பா!' என்று அலறத் தொடங்கினான். "அய்யோ! என்னிடமில்லை புதையல் ரகசியம்!" என்று ஓலமிட்டான். அவனது சட்டை கிழிந்து தொங்கியது. உடம்பெல்லாம் ரத்தக் கோடுகள். நெற்றியிலே தோல் கிழிந்து ரத்தம் முகமெல்லாம் வழிந்து கொண்டிருந்தது!

"பிறகு யாரிடம் இருக்கிறது? அந்தக் கிழப் பயல் மாயாண்டியிடமா? சொல்! உண்மையைச் சொல்!" என்று கத்தினார் வெள்ளியம்பலம். அவனோ, அடி தாங்காது 'அம்மா; அப்பா' என முணகிக் கொண்டிருந்தானே தவிர, அவர் கேள்விக்குப் பதில் சொல்லத் தயாராயில்லை. "சொல்லுகிறாயா—இல்லையா? என்று அவன் தலைமுடியைப் பிடித்துக் குலுக்கினார். அவன் கழுத்தை அமுக்கிக் கொல்வதாகப் பயமுறுத்தினார். அவன் எதற்கும் அசையவில்லை.

புதையல் ரகசியம் எப்படிப் பட்டது என்பதை அவன் உணருவான். அது தன் தந்தை குமாரவடிவின் சொத்து. அவர், அது எப்படிப் பயன்பட வேண்டும் என்று விரும்பினார் என்பதை மாயாண்டி மூலம் கேள்விப் பட்டிருக்கிறான். ஆகவே, தந்தையின் இறுதி மூச்சு நிற்கும்போது எழுந்த கோரிக்கையை அவன் நிறைவேற்றிட வேண்டுமென்று உறுதி கொண்டிருந்தான். அதனால் உயிர் போவதைப் பற்றிகூட அவன் கவலைப் படாமல் இருந்தான். புதையல், அம்பலம் போன்ற அக்கிரமக்காரர்களின் கையில் சிக்கிடலாகாது என்று அவன் தீர்மானித்தான்.

"விரலுக்கு விரல் நகக் கண்களிலே ஊசியேற்றி விஷயத்தைக் கிரகிக்கிறேன். விடியட்டும்!" என்று உறுமினார் அம்பலம்!

"மலடியின் வயிற்றைக் கிறுவதால் குழந்தை வந்து விடுமோ?" என்று துரை ஏளனம் செய்தான், வலியையும் பொறுத்துக்கொண்டு!

அடிகளாலும் உதைகளாலும் தான் எவ்வளவு பயங்கரமான மனிதன் என்பதை துரைக்கு உணர்த்தி விட்டோம் என்று கருதிய அம்பலம், சிறிது சமாதானமாக, "இதைக் கேளடா தம்பி! நீ மட்டும் அந்த ரகசியத்தைச் சொன்னால், உனக்கு வேண சௌகரியம் செய்வேன்—கேட்டதெல்லாம் கொடுப்பேன்." என்று உரைத்து விட்டு அவன் முகத்தைப் பார்த்தார்.

"மாணிக்கத் தொட்டில் செய்திருக்கிறேன்; அதற்காகவாவது ஒரு பிள்ளை பெறு – என்று மலடியைப் பார்த்து எந்த மடையனும் கேட்க மாட்டான்." என்று மீண்டும் கேலி பேசினான்; காயங்களிலே ஒழுகும் ரத்தத்தைத் துடைக்கவும் கை எடுக்க முடியாத அந்தக் காளை!

அந்தக் கேலிக்குப் பதிலாக திருக்கை வாலின் ஒலிதான் கிளம்பியது. அடித்தார், அடித்தார், அவன் சுருண்டு விழும் வரையில் அடித்தார். ஆவேசம் வந்தவர் போலக் குதித்தார்!

"உண்மையைச் சொல்லாவிட்டால் உயிர் போகும்! இந்த வீட்டுக் கொல்லைப் புறத்திலேயே உன் பிரேதத்திற்குக் குழி வெட்டப் படும்! ஜாக்கிரதை!" என்று கூச்சலிட்டார்! கதவை ஓங்கிச் சாத்தி வெளியே பூட்டிக் கொண்டு போய்விட்டார். துரையோ முணகவும் சக்தியற்றவனாகத் தரையிலே கிடந்து துடித்தான்.

★

பொழுது விடியத் தொடங்கியது. வலியின் வேதனை பொறுக்க மாட்டாமல் தரையிலே நெளிந்து கொண்டிருந்த துரை, களைப்புற்றுக் கண்ணயர்ந்தான். கட்டுண்ட கைகளோடு புரண்டு படுக்கவும் முடியாமல், இம்சைப் பட்ட அவனுக்கு தூக்கந்தான் சரியாக வருமா, என்ன? விழித்துக் கொண்டான். ஆனாலும் கண்களைத் திறக்க வில்லை. இமைக் கதவை மூடியவாறு சிந்தனையிலாழ்ந்தான். "தான் யார்? எங்கே பிறந்தோம்? எங்கே வளர்ந்தோம்? எப்படியெல்லாம் வாழ்க்கைச் சகடம் சுழன்றது! கடைசியில் இப்படியும் ஒரு கஷ்டம் வந்துவிட்டதே: ஏன்?"— இந்தக் கேள்விக்கு அவனால் விடை காணவே முடியவில்லை. உடலிலே ரத்தம் கசிகிறது! உள்ளத்திலும் அப்படித்தான்!

உலகத்தையே மறந்து தன்னைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தான். அவனது சிந்தனையைக் கலைப்பதுபோல அந்த அறையின் ஜன்னல் பக்கம் ஒரு சிறு ஓசை கேட்டது. கண்களைத் திறந்து பார்த்தான். பொழுது சரியாக விடியவில்லை. ஜன்னல் பக்கம் யாரோ நிற்பது தெரிந்தது. ஆம்; அது ஒரு பெண்ணின் உருவம் தான்! கருக்கல் நேரம்! யாரென்று கண்டுபிடிக்க முடியவில்லை!

"யாரது? பரிமளாவா?" என்று கேட்டான் ஆவலாக! அவள் பேசவில்லை; அப்படியே நின்றுகொண்டிருந்தாள். துரை, மெதுவாக எழுந்து ஜன்னல் பக்கம் நகர்ந்தான்.

[ வளரும் ]



# இப்படிப் பேச்சு நடந்திருக்கும்!

பே: ஏனய்யா—உம்மை யார் இப்படி எழுதச் சொன்னது?

கு: இல்லிங்க; அவன் எழுதினான்—நானும் அதுபோல ஒன்று எழுதினேன்.

பே: அவனா முதலில் எழுதுகிறான்? நீர்தான் ஆறு வருடமாக தினந் தோறும் எழுதி எழுதி மானத்தை வாங்குகிறீர்! நானும் எவ்வளவோ தடவை சொல்லி விட்டேன். பத்திரிகையிலே உம்மைப் பற்றி வெளிப்படையாகப் பல அறிக்கைகள் விட்டுவிட்டேன். புத்தி வரக் காணோம்!

கு: எத்தனை அறிக்கைகள் நீங்கள் விட்டாலும் நான் கவலைப் பட மாட்டேன். ஒருசமயம்; "பிளீஸ் கெட் அவுட்! ஐ ஆம் சீரியஸ்!" என்று சொன்னீர்களே; அதை விடவா இது பெரிது!—கேவலம்?

பே: எழுதுவதுதான் எழுதுகிறீரே; அவன் எழுதியதற்குப் பதில் சொல்லும் தோரணையில் எழுதக் கூடாதா? அவனுங்க எழுதியவை ஒன்றுக்குமே இதுவரை நீர் பதில் கூறியதில்லையே!

கு: அது என் தவறல்ல! பதில் சொல்ல முடியாத நிலைமை. எந்தப் பதிலைச் சொன்னாலும் முன்னுக்குப் பின் முரணாகவே அமையும். காங்கிரஸ் ஒழிக—என்று கூறி யிருக்கிறோம். பிறகு அது வாழ்க—என்றும் உப தேர்தல்கள் அனைத்திலும் ஓட்டுக் கேட்டிருக்கிறோம். பார்ப்பனர் ஒழிக—என்று முழங்கி யிருக்கிறோம். பின் அவர்களும் எங்களவர் என்று அறிக்கை விட்டிருக்கிறோம். சினிமா வீழ்க—என்று கூறியிருக்கிறோம். சினிமா எழுத்தாளர், நடிகர்கள் சிலர் நம்மவர் என்று சொல்லியிருக்கிறோம். அது மட்டுமல்ல; சினிமா நடிகர்—முதலாளி தகராறில் நானே சமாதானத் தூதனாகவும் இருந்திருக்கிறேன். அந்த சினிமா முதலாளியிடம் கார் நிதியும் பெற்றிருக்கிறோம். அதனால்தான் பதில் சொல்லும் முறையை விட்டு, வசை பாடும் முறையில் நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

பே: அது சரி; ஈரோட்டுப் பையனும் திருவாரூர்ப் பையனும் அவனை எதிர்த்தார்கள் என்று எழுதியிருக்கிறீரே: இது எவ்வளவு பெரிய பூசணிக்காய்ப் பொய்! ஈரோட்டுப் பையன் முன் மொழிய, திருவாரூர்ப் பையன் வழி மொழிய, ஆனர்ஸ் பையன் தேர்ந்தெடுக்கப்பட்ட சுமுகமான சூழ்நிலை கொண்ட நிகழ்ச்சியை இப்படி அப்பட்டமாக மறுத்துரைத்தால் யாரையா நம்புவது? அிருக்கட்டும்; நான் கிழவன்—அவர்களைப் பையன்கள் என்கிறேன்! நீரும் பையன்கள் என்று ஆரம்பித்து விட்டீரே, என்ன? ஒவ்வொருவனுக்கும் நாலைந்து பிள்ளைகள் இருக்கின்றன அய்யா—தெரியுமா உமக்கு? அவர்களைப் பையன்கள் என்று கூறி, நீரும் என் தகுதியைத் தட்டிப் பறிக்கப் பார்க்கிறீரா?

கு: அது போகட்டுங்க! ஆவடி காங்கிரசின் போது அவர்கள் வடநாட்டுத் தலைவர்களுக்கு கருப்புக் கொடி காட்டவில்லை என்பதைக் குறிப்பிட்டேனே; அது எப்படி?

பே: அய்யே – பெரிய வெங்காயம்! இதைக் குறிப்பிட்டு விட்டீராக்கும்! அவர்களும் நாமும் ஒன்றாயிருக்கும்போது, ஆச்சாரியாருக்கு கருப்புக் கொடி காட்டி, பட்டேலுக்குக் காட்டாமல் இருந்துவிட வில்லையா?

கு: ஓ—அது "ஓட்டல் பசோட்டா" தீர்மானம் — அதை மறந்து விட்டேன்.

பே: இப்படி மறந்து மறந்துதான் என் உயிரை வாங்குகிறீர். அவனுங்க, வடநாட்டு மந்திரிகளுக்கு கருப்புக்கொடி காட்ட முதலில் தீர்மானம் போட்டானுங்க! அதன்படி அனைவரும் கொடி காட்டி, அடக்குமுறைக்காளாகி அடி உதை வாங்கினானுங்க! அப்படிக் கோடி காட்டியது ஒரு அடையாள நிகழ்ச்சி. பிறகு தீர்மானம் போட்டே நிறுத்தி வைத்தானுங்க! இப்போது மறுபடியும் தீர்மானம் போட்டால் நேருவுக்குக்கூட கருப்புக் கொடி காட்டுவானுங்க!

கு: தீர்மானம் போட்டு நிறுத்தி வைத்ததெல்லாம் யாருக்கு ஞாபகம் இருக்கப் போகிறது என்று நினைத்துத்தான் எழுதினேன்.

பே: உமக்கு ஞாபகமிருக்காது — பொது மக்களுக்குமா ஞாபகம் இருக்காது? அவன் ஆரம்பப் பொது வாழ்க்கையின் போது பல தடவை யாரிடமோ பணம் வாங்கினான் என்றும், அதனால் அவரையேதான் தேர்தலில் ஆதரிக்க வேண்டுமென்றும் எழுதியிருக்கிறீரே: அது சரியா?

கு: ஜனங்கள் நம்புவார்கள் என்று......

பே: புடலங்காய்! அப்படியே வாங்கியிருந்தால்தான் என்னய்யா? சொந்தத் தேவைக்கு வாங்கிய பணத்திற்காக கட்சியின் கொள்கையை விற்க வேண்டுமா?

கு: நான் அப்படித்தானே நினைத்து இங்கு இருக்கிறேன். நான் மட்டுமா? இன்னும்...நம்ப......டார்...

பே: போதும்! போதும்! இப்போது நான் உம்மைக் கேட்ட கேள்விகளை எல்லாம், நம்ம தோழர்கள் என்னைக் கேட்கிறார்கள்; நான் போகுமிடங்களில்! உம்மால் எனக்கு நூற்றுக்குத் தொண்ணூறு நாள் மன வேதனைதான்! உம்மை விட எதிரிகள் மேல்!

கு: அதைத்தான் அறிக்கையிலேயே எழுதியிருந்தீர்களே!

பே: என்னமோ; நீர் தொட்டது எதுவும் துலங்கவில்லை.

கு: கார் நிதியைப் பற்றித்தானே சொல்கிறீர்கள்?

பே: சரி – சரி – போம்! போம்!

## ...துளி இரத்தம்...

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

...டந்திருக்கிறார்கள் ஏமாற்றத்
...பிரதிநிதிகள்! ஆனால் எங்கள்
...அ......?

...ராணி! நான் காதலித்ததும்
...ளேதான்! என் கை பிடித்த
... அவளே! அழகின் ராணி
...ள்! கருணையின் வடிவம்—
...பின் இருப்பிடம் — இன்பத்
... பொக்கிஷம்! அவளின் அரவ
...ப்பிலே—கொஞ்சும் அவளது
...ழிகளிலே—நான் உலகையே
...ந்து விடுவேன். கவலையற்ற
...டிப் புறுக்கள் போல, காதல்
... பாடிக் கொண்டே,
...க்கை வானில் வட்டமிட்டுக்
...ண்டிருந்தோம்.

...ர்வதி, பக்கத்து வீட்டுப்
...ள்! பட்டணத்திலே படித்துக்
...ண்டிருந்தாள். விடுமுறையில்
...ருந்தாள். பார்வதியும், ராணி
... இணைபிரியா தோழிகளாகி
...டார்கள். பேச ஆரம்பித்தால்
...க் கணக்கில் பேசிக் கொண்
...ப்பார்கள்!

"என்ன பேசுகிறீர்கள் மணிக்
...க்கில்?" என்பேன் நான்.
...தெல்லாம் இரகசியம்' என்று
...துப் பல் காட்டி முறுவலிப்
... எப்போதும் திறந்திருக்கும்
...ட்டியை திடீரென்று பூட்டி
...க்க ஆரம்பித்தாள். எனக்கு
...'சுருக்'கென்றிருந்தது.எங்கள்
...வாட்டத்திலும் எந்த இரகசிய
... இருந்ததில்லை. பெட்டியை
...டி வைப்பது எனக்கு அவ
...மாக இருந்தது. பத்திரமாக
...டி வைக்க வேண்டிய
...ருள் எதுவாக இருக்கும்?
...சிந்தனை ஓடிற்று இப்படி!
...றமையால் நான் பைத்தியக்
...னேன்! அவளின் பால்
...யும் முகமும்—கனவு காணும்
...களும்—இன்பத்தை அளிக்
... இதழ்களும்—எனக்கு வேம்
...ன! அவளின் தளிர்க் கரங்கள்
...கச் சுட்டது. சந்தேகம் என்
...தனையைக் கிளறி விட்டது.
...தேகத்தின் சோரப் பிடியில்
...கிவிட்ட எனக்கு. தேன்
...ழியும் கசந்ததில் வியப்பொன்
... இல்லையே! நாட்கள் நகர,
...ர, என் சந்தேகமும் வளர
...ம்பித்தது.

...ரு நாள் மாலை. ராணி வெளி
... சென்றிருந்தாள். பூட்டை
...டைத்து பெட்டியைத் திறந்
...தேன். துணிகளுக்கு மத்தியில்
...ப்பு ரிப்பனால் கட்டப்பட்ட
... கடிதக் கட்டு யிருந்தது.
...வசர அவசரமாக அவைகளைப்
...த்துப் பார்த்தேன். அவ்வளவும்
...தல் கடிதங்கள்! அன்பே!
...யிரே!—கற்கண்டே! பூச்
...ண்டே!—காவியமே! ஓவிய
...!—இதய விளக்கே! உதய
...வே!—தென்றலே! மின்னலே!
...தேனே! மானே!-என்று கடிதங்
... ஆரம்பித்திருந்தன.ஒவ்வொரு
...தமும் ஒரு காதல் காவியத்
... சொல்லிற்று. அந்த நிமிடம்...
...ன் வாழ்விலே மிகப் பயங்கர
...ன நேரம்! நெருப்பாக எரிந்தது
...ன் நெஞ்சு! இதயம் விம்மி விம்மி
...ழுதது! எல்லாக் கடிதங்களும்
...ங்கள் திருமணத்திற்குப் பின்
...ழுதியவைகளே! அதுவும் என்
...ருங்கிய நண்பன் ஒருவனால்
...ரையப்பட்ட காதல் ஓவியங்
...! காதலிலே வெற்றி பெற்று
...ட்டோம் என்று இறுமாந்திருந்த
...க்கு, இது எத்தகைய வேதனை
... அளித்திருக்குமென்று நீங்க

ளே நினைத்துப் பாருங்கள், டாக்டர்! என் மனைவி மாற்றானின் வெள்ளாட்டி! நினைக்கவேமுடியவில்லை. அவள் என்மேல் சொரிந்த ஆசை—பாசம்—நேசம் எல்லாம் போலி தானா? 'அத்தான், அத்தான்' என்று கொஞ்சிக் குலவியதெல்லாம் ஒத்திகை தானா? சிந்தை குளிர பேசி-காந்தள் கரங்களால் தழுவி பவழ இதழ்களால் பரவச மூட்டி உள்ளத்தைக் கொள்ளைகொண்டு, வேறு ஒருவனின் இதய ராணியாகி விட்டாளே, பாவி! ஏமாற்றி விட்டாள்! ஏமாந்து போனேன்! வஞ்சகி! மணமாலை சூட்டியவனை மறந்து, மாற்றானின் மடியை தேடிக் கொண்டாளே! நாசகாரி! உச்ச நிலையை அடைந்தது என் கோபம்!

அவள் திரும்பி வந்ததும், வழக்கம் போல சாப்பிட்டோம். சிரிக்கச் சிரிக்கப் பேசினாள். நானும் சிரித்தேன். என் சிரிப்பிலே கூறிய வாள் மறைந்திருப்பதை அறியவில்லை அந்தப் பேதை! மஞ்சத்திலே அயர்ந்து தூங்கினாள்; வஞ்சகம் என் இதயத்திலே படமெடுத்தாடியது! எழில் கொழிக்கும் அவளின் முகத்தைப் பார்த்தேன்; அழகுக்குப் பின்னால் அபாயம் மறைந்திருக்கிறது என்று எச்சரித்தது என் உள்ளம்! கனவு காணும் கண்களைப் பார்த்தேன்; கள்ளத்தனம் மறைந்திருக்கிறது என்று சொல்லிற்று என் மனசாட்சி! இன்பம் ஊறும் இதழைப் பார்த்தேன்; விஷம் தோய்ந்திருக்கிறது என்று கூறியது என் இதயம்! என்னைத் தழுவித் தவழ்ந்த தளிர் கரங்களின் மேல் என் விழிகள் பதிந்தன; உன் வாழ்வை இறுக்கும் பாசக்கயிறு அது என்று என் சிந்தனை ஓடிற்று! நான் மிருகமானேன்...... அவளின் சங்குக் கழுத்தை, என் பலம் கொண்ட மட்டும் அழுத்தினேன்... மூச்சுத் திணறியது... விழிகள் திறந்தன... "அத்தான்...அத்......" என்றாள். நான் பேசவில்லை; அவளால் பேச முடியவில்லை. விழிகள் பிதுங்கின—அவளின் இதழ் ஓரத்தில் இரத்தம் வடிந்தது — அதில் ஒரு துளி இரத்தம்தான் என் கையில் விழுந்தது; நீங்கள் கொத்தி எடுத்தீர்களே சதையை—அந்த இடத்தில்!

பாம்பு கடித்து இறந்துவிட்டாள் என் மனைவி என்று கதை கட்டினேன். ஜமீந்தாரிணியை பெட்டியில் வைத்துதான் அடக்கம் செய்வது எங்கள் வழக்கம். அதுபோலவே பெட்டியில் வைத்து அடக்கம் செய்துவிட்டேன். ராணியின் மரணத்தைப் பற்றி யாரும் சந்தேகம் கொள்ளவில்லை.

என் வாழ்வுச் சோலையில் பூத்த மலரை நானே கிள்ளி எறிந்துவிட்டேன். நானே—என் கையாலே—என் வீட்டின் விளக்கை அணைத்துவிட்டேன். நிலைகுலைந்து போனவளுக்கு தகுந்த தண்டனை! அவளை அடக்கம் செய்த பின்தான், புயல் ஓய்ந்தது என் உள்ளத்தில். அமைதியாக நாட்களை எண்ணிக்கொண்டிருந்தேன்.

ஒரு நாள் பார்வதி வந்தாள். ராணியின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்து, எனக்கும் ஆறுதல் கூறினாள். நானும் வருந்துவதாக நடித்தேன்.

நீண்ட நேரத்திற்குப் பின், "அண்ணா, ராணியின் பெட்டியில் ஒரு கடிதக் கட்டு இருக்கிறது. அதை எடுத்துக் கொடுக்கிறீர்களா?" என்றாள் பார்வதி. நான் திடுக்கிட்டுப் போனேன்.

"கடிதக் கட்டா?—"

"ஆமாம்! சிகப்பு ரிப்பனால் கட்டப்பட்டிருக்கும்..."

"அவை யாருடையது?"

"என்னுடையவைகள்! என் காதலர் எனக்கு வரைந்த காவியங்கள்! என் வீட்டில் அவைகளை வைக்க என் நெஞ்சம் துணியவில்லை. ஆகவே, ராணியிடத்தில் ஒப்படைத்திருந்தேன்..."

ஐயோ, டாக்டர்! அக்கணத்தில் எப்படி இருந்திருக்கும் என் நிலைமை! என் இதயத்தில் ஆயிரம் வேல்கள் தாக்கின—சம்மட்டி அடி விழுந்துகொண்டே யிருந்தன!

ஓடிச் சென்று அந்தக் கடிதங்களை—என் ஆசை மனைவியின் உயிரைக் குடித்த கடிதங்களைக் கொண்டு வந்தேன்.

"அண்ணா! இவைகளேதான்... நான் வருகிறேன்" என்று கடிதங்களை எடுத்துக்கொண்டு புறப்பட்டாள் பார்வதி. அவளை ஏறிட்டுப் பார்க்க முடியவில்லை என்னால். என் கண்கள் என்னைக் காட்டிக் கொடுத்துவிடுமென்று பயந்தேன்!

அழகுத் திருமேனியை அழித்த கைகளைப் பார்த்தேன். என் கண்கள் நீரைக் கொட்டின. அவசரத்தில் அறிவை இழந்தேன்; என் இன்பத்தையும் இழந்தேன். ஆத்திரத்தில் புத்தியை இழந்தேன்; பத்தரை மாற்று தங்கத்தையும் இழந்தேன். வேதனையை வார்த்தைகளால் எப்படி வடித்தெடுப்பது?

அந்த நேரத்தில், என் கையில், என் இதயவல்லியின் இதழிலிருந்த சிந்திய ஒரு துளி இரத்தம் விழுந்த இடத்தில், திடீரென்று தியாகச் சுட்டது! நான் கதறிக்கதறி அழும் அளவுக்கு வேதனையாக வளர்ந்தது. மற்றவைகள் யாவும் நீங்கள் அறிந்ததுதானே. கள்ளம் கபடமற்ற புள்ளிமானை கொலை செய்ததற்கு எனக்கு சரியான தண்டனை கிடைத்து விட்டது. தேடக் கிடைக்காத தங்கத்தை-காணக் கிடைக்காத மாணிக்கத்தை இழந்த நான் கொந்தளிக்கும் உள்ளத்தோடு வாழ முடியாது! வாழ ஆசைப்பட்டேன். ஆனால் அழுது அழுதுதான் வாழமுடியும்—அந்த ஒரு துளி இரத்தம் என்னை வாட்டி வதைக்கிறது! ஆகவே என்னுடையவளை தேடிச் செல்கிறேன். அதுதான் என் தகாத செயலுக்கு நான் தேடிய தண்டனை என் வேதனையைப் போக்கும் மாமருந்து! இக் கடிதம் தங்களுக்கு கிடைக்கும் நேரத்தில் நான் என் விழி நிறைந்தவள் சென்ற வழியில் போய்க் கொண்டிருப்பேன்... சாகும் இந்நேரத்தில் நீங்கள் எனக்கு செய்த உதவிக்கு எனது நன்றி! வணக்கம், டாக்டர்.

அன்பு,
**மோகன்.**

★

## காமராசர் கண்களுக்கு!

முன்னாலிருந்த ஆட்சிபீட மேறிகளின் முறைகெட்ட செயல்களை பின்னால் வருவோர் அழித்து விடுவதுதான் பண்புடைய செயல்! குடியாட்சிக் கொள்கைக்கு மதிப்பு தரும் செயல்!

திரு-கொச்சி பகுதிகளிலே துப்பாக்கி வேட்டையாடி, சலாசர் வேஷம் போட்ட பட்டம் சர்க்கார் இப்போது சாய்ந்துவிட்டது.

பனம்பள்ளி வந்தார்.

உரிமைப் போர் தொடுத்த வீரர்கள் மீது புனையப்பட்ட போலி வழக்குகளை 'வாபஸ்' பெற வேண்டுமென்ற மக்கள் குரல் வானளாவியது!

சுமார் 400-பேர் மீது வழக்குகள் முடிவடையாமல் இருந்தன. சிறைச்சாலைக்கும், வீட்டிற்குமாக நடை போட்டுப் பழகிய அந்த வீரர்கள் நீதி மன்றத்துக்கும் வீட்டுக்குமாக அலைந்தார்கள்!

—இப்போது அந்த நிலைமை மாறிவிட்டது!

பனம்பள்ளி ஆட்சி அந்த வழக்குகளையெல்லாம் 'வாபஸ்' வாங்கிவிட்டது!

சரித்திரத்திலே பட்டம் கிறுக்கி வைத்திருந்த அழுக்கு ஏடுகளைக் கிழித்துவிட்டார் பனம்பள்ளி.

இங்கு காமராசர் என்ன செய்தார்?

ஆச்சாரியார் திராவிட முன்னேற்றக் கழகக் காளையர் மீது கட்டிவிட்ட தூத்துக்குடி—கல்லக்குடி வழக்குகளை 'வாபஸ்' பெற்றாரா?

இல்லை! இல்லை! வழக்கு மன்றத்திலேதான் அவைகளுக்கு முடிவு கண்டோம்—காமராசரின் 'பச்சைத் தமிழ' னுள்ளத்திலே முடிவு காணவில்லை!

பனம்பள்ளி மக்கள் மன்றத்துக்கு மதிப்பு வைத்தவராகிவிட்டார்! பட்டத்தின் வெறிச் செயலுக்குக் கழுவாய் தேடிவிட்டார்!

காமராசர் கண்கள் பனம்பள்ளி காட்டும் ஜனநாயகப் பாடத்தைப் படிக்கட்டும்—அவருடைய பெருந்தன்மையைப் பார்த்தாவது பயந்த மனப்பான்மைக்கு விடுதலை வழங்கட்டும்!

Best copy available

# ★ துரோகிகள் சந்திப்பு! ★

## துணைவி யிழந்தோர் துணைவராயினர்!!

சீதை காணமற் போனது கண்ட ராமன் புலம்பினன். மரஞ்செடி கொடிகளைப் பார்த்து 'மனைவியைக் கண்டீரோ?' என மாரடித்து ஒப்பாரி வைத்தான்

''சீதை அஞ்ஞானத்தால் உன்னைப் பார்த்து தகாத வார்த்தைகள் கூறினள் என்றால்; நீ அதையும் பொறுத்துக் கொண்டு அங்கேயே காவல் புரிந்திருக்கக் கூடாதா?'' என்று தம்பி லக்ஷ்மணனைத் திட்டினன். இப்படியாக அழுது புலம்பி, கடைசியில் ஜடாயுவின் மூலம், சீதை ராவணன் வசம் இருப்பதை அறிந்தார்கள்.

எப்படி அவளை மீட்பது என்று யோசனை செய்து கொண்டு காட்டில் திரியும் போது, கபந்தன் என்னும் அரக்கன் அவர்களைப் பிடித்துக் கொண்டான் கபந்தனுக்கு தலை கிடையாது—வாயும், கண்ணும் வயிற்றிலேயே இருந்தது கால்களும் கிடையாது வனத்திலே செல்லும் மிருகங்களையும் மனிதர்களையும் கைநீட்டி இழுத்து வயிற்றுக்குள் போட்டுக் கொள்வது அவன் வழக்கம் அவனை ராம லக்ஷ்மணர் கொன்றுவிடுகிறார்கள். கொல்லப்பட்டதும் கபந்தன் அரக்க உருவம் மாறி, தேவ உருவில் சொர்க்கலோக வாசியாக மாறிவிடுகிறான்

இந்திரனின் சாபத்தால் இப்படி ஆகிவிட்டதாகத் தன் பூர்வீகக் கதையைக் கூறிவிட்டு, ராம லக்ஷ்மணர்கள் சீதையை மீட்க வேண்டுமானால், ரிச்யமூக மலையில் — வாலியால் துரத்தப்பட்டு ஒளிந்திருக்கும் சுக்ரீவனின் உதவியைப் பெறவேண்டுமென்றும் தெரிவித்து, விமான மூலம் சொர்க்கம் புறப்பட்டான்.

இந்தக் கபந்தன் கதையிலேயிருந்து, தேவர்கள், ராம லக்ஷ்மணர்களாக மட்டும் அவதாரம் செய்யவில்லை; கபந்தன் போன்ற பயங்கர அரக்கர்களாகவும் அவதரித்திருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது!

பிறகு, ராம லக்ஷ்மணர் சுக்ரீவனைத் தேடிப் புறப்பட்டார்கள். சுக்ரீவன் யார் தெரியுமா? அவன் நிலைமை என்ன தெரியுமா? ராமனைப் போலவே அவனும் நாட்டையும், மனைவியையும் இழந்து பம்பா நதி தீரத்திலே உலவிக் கொண்டிருப்பவன். பரதனுக்கு நாட்டுரிமையில்லாமற் செய்ய சதி புரிந்த ராமனும் — வாலியை ஏமாற்றி நாட்டைக் கைப்பற்றத் திட்டமிட்டு விரட்டப்பட்ட சுக்ரீவனும் துணைவரானார்கள். ''என் மனைவியை நீ வாலியிடமிருந்து மீட்டுத் தா! நான் உன் மனைவியை ராவணனிடமிருந்து மீட்டுத்தருகிறேன்'' என்று சுக்ரீவன் ராமனுக்கு உறுதி அளித்தான். சுக்ரீவன் ஏன் விரட்டப்பட்டான்? வாலிக்கும் அவனுக்கும் ஏன் பகை வளர்ந்தது? அந்தக் கதையை ஆச்சாரியாரே, 6—3—55-ம் தேதிய 'கல்கி'யில் எழுதுகிறார்; படியுங்கள்—சுக்ரீவனே கதை சொல்வது போன்ற கட்டம்—

"என் அண்ணன் வாலி வானர ராஜ்ய பட்டாபிஷேகம் பெற்று, கிஷ்கிந்தையில் அரசு புரிந்து வந்தான். மகா பராக்கிரமசாலி. அவனிடம் அன்பும் பக்தியும் குறைவின்றிச் செலுத்திக்கொண்டு, நான் யுவ ராஜனாக இருந்து வந்தேன். வாலிக்கும் மாயாவி என்கிற அசுரனுக்கும் பழைய விரோதம். ஒரு நாள் ராத்திரி அந்த அசுரன் கிஷ்கிந்தைக்கு வந்து வாலியைப் போருக்கு அழைத்தான்.

"அவன் இரவில் போட்ட கர்ஜனையைக் கேட்டுக் கோபங்கொண்டு தூங்கிக்கொண்டிருந்த வாலி எழுந்து, அவனை உடனே எதிர்க்க வெளியேறினான். நானும் அவனுக்கு உதவியாகக் கூடவே சென்றேன். நிலா வெளிச்சத்தில் நாங்களிருவரும் வருவதைப் பார்த்து மாயாவியானவன் ஓடி ஒரு குகைக்குள் நுழைந்தான். வாலியும் அவனைத் துரத்திக்கொண்டு குகைக்குள் புகுந்தான். நானும் உள்ளே புகப்போனேன். வாலி என்னை வேண்டாம் என்று தடுத்துவிட்டான். தான் ஒருவனாகவே அந்தத் துஷ்டனைக் கொல்ல வேண்டும் என்று சொல்லி, என்னை அந்தக் குகையின் வாயிலில் வெளியே நிற்கச் சொன்னான். சொல்லிவிட்டு அவன் உள்ளே புகுந்து சென்றான்.

"உள்ளே சென்றவன், பல நாட்களாகியும் திரும்பி வரவில்லை. அண்ணனுக்கு என்ன நேர்ந்ததோ என்று நான் கவலைப் பட்டுக்கொண்டிருந்த சமயத்தில் குகைக்குள் அசுரர்களுடைய பெருங் கூக்குரல் கேட்டது. அதன்கூடக் குகையிலிருந்து ரத்த வெள்ளம் பெருகி வந்தது. இதைக் கண்டதும் வாலியை, மாயாவியும் பல அசுரர்களும் சூழ்ந்துகொன்று விட்டார்கள் என்று தீர்மானித்துக் கொண்டேன். அசுரர்கள் வந்து என்னையும் தாக்குவார்கள் என்று எண்ணி ஒரு பெரும் பாறாங்கல்லைக் குகை வாயிலில் வைத்து மூடி விட்டேன்.

"கிஷ்கிந்தைக்கு வருத்தத்தோடு திரும்பினேன். வாலி இறந்தான் என்று யாருக்கும் சொல்லாமலே ராஜ காரியங்களைப் பார்த்து வந்தேன். பிறகு வானரப் பிரஜைகள் நிர்ப்பந்தித்தார்கள். 'அரசனில்லாமல்போனால் ராஜ்யம் பாழாகப் போகும்; வெகு நாளாகியும் வாலி திரும்பவில்லை; நீயே பட்டாபிஷேகம் செய்து கொண்டு அரசு புரிவாய்' என்று வற்புறுத்தினார்கள். நானும் அதற்கு இணங்கினேன்.

"சில காலம் கழித்து மாயாவியையும் அவனுடைய துணையாட்களாக இருந்த அசுரர்களையும் கொன்று ஒழித்து விட்டு வாலி திரும்பினான். குகை அடைபட்டிருப்பதைப் பார்த்து, "சுக்ரீவா! சுக்ரீவா!" என்று உள்ளேயிருந்து கத்திப் பார்த்தான். நான் அவ்விடமில்லையானபடியால் எனக்கு இது ஒன்றும் தெரியாது. அவன் என் மேல் மகா கோபங் கொண்டு கற்பாறையை உதைத்துத் தள்ளி விட்டுக் கிஷ்கிந்தைக்குள் பிரவேசித்தான்.

"நான் ராஜ்ய பட்டாபிஷேகம் செய்து கொண்டு அரசு புரிவதைப் பார்த்ததும் அடங்கா சினம் மேலிட்டு என்னைப் பலவாறாகத் திட்டினான். நான் நடந்ததை நடந்தது போலச் சொன்னேன். 'அரக்கன் உன்னைக் கொன்று விட்டான் என்று எண்ணி இவ்விதம் செய்தேன். பிரஜைகளுடைய நிர்ப்பந்தத்துக்காக அபிஷேகம் பெற்றேன். இந்த ராஜ்யம் உன்னுடையது; திரும்பப் பெற்றுக் கொள். உன் அடிமையாக நான் முன்போல் இருப்பேன்' என்று சொல்லி அவன் காலில் விழுந்தேன். அவனோ நான் சொன்னதை லட்சியமே செய்யவில்லை. நான் துராசைப் பட்டுக் குகை வாயிலை அடைத்து விட்டு அக்கிரமமாகப் பட்டாபிஷேகம் செய்து கொண்டேன் என்றே அவன் நினைத்து, என்னை நகரத்திலிருந்து வெளியே துரத்தி விட்டான். 'திரும்பி இந்தப் பக்கம் வந்தால் உன்னைக் கொல்வேன்' என்று சொல்லி என்னைத் துரத்திவிட்டான். அப்போது நான் உடுத்தியிருந்த வஸ்திரத்துடன் வெளியே ஓடினேன். அதுமுதல் காடும் மலையுமாக மறைந்து திரிந்து உயிரைக் காப்பாற்றிக்கொண்டுவருகிறேன். எல்லாம்இழந்துஇந்த நிலையிலிருக்கிறேன். இந்த நான்கு வானரர்களே எனக்குத் துணையாக இருந்து வருகிறார்கள். கோபத்தால் உண்மையை யறிய மாட்டாமல் என் அண்ணன் இம் மாதிரி அக்கிரமம் செய்து வருகிறான். மகா பராக்கிரமசாலியான அந்த வாலியை ஹதம் செய்து என்னைக் காப்பாற்றுவாய்'' என்றான் சுக்ரீவன்.




இது ஆச்சாரியார் தீட்டியுள்ள கதை!

இதில் சுக்ரீவன் பேச்சில் ஒரு துளியாவது உண்மையிருக்கிறதா என்று கவனியுங்கள். மாயாவி என்ற அசுரனோடு வாலி, தனியே சென்று சண்டை போடுகிறான். குகையிலிருந்து ரத்தவெள்ளம் பெருகி வந்திடுகிறது அது வாலியின் ரத்தந்தான் என்று கருதி, அவன் இறந்து விட்டதாகச் சுக்ரீவன் கருதுகிறான் குகையினுள்ளே இருதரப்பாரும் சண்டை போடுகிறார்கள். அதிலும் வாலி, யாராலும் வெல்லப்பட முடியாத வீரன் என்பது சுக்ரீவனுக்கே தெரியும். ஹிமவானாலும் சமுத்திர ராஜனாலும் ஜெயிக்க முடியாத ஆயிரம் யானைகளின் பலம் பெற்ற துந்துபி என்ற எருமை வடிவ அசுரனை, ஒரே அடியில் வீழ்த்தி ஒரு யோசனை தூரத்திற்கப்பால் வீசி எறிந்த வீரன் வாலி என்பதை சுக்ரீவனே ராமனிடம் கூறுவதாக ஆச்சாரியார் 13-3-55 இதழில் குறிப்பிட்டிருக்கிறார் அத்தகைய பலம் பொருந்திய வாலியின் ரத்தமே வழிந்தோடி வருவதாக சுக்ரீவன் நினைத்திருக்க முடியுமா?—சரி! அப்படியே அண்ணன் இறந்து விட்டதாகத் தவறாகக் கருதினாலும், தம்பி என்ன செய்திருக்கவேண்டும்? 'அண்ணனே போன பிறகு எனக்கென்ன வாழ்வு'? என்று, தன் சேனைகளைத் திரட்டி, அமைச்சன் அனுமானுடன் குகைக்குள்ளே நுழைந்து, மாயாவியை எதிர்த்திருக்க வேண்டாமா? — அதைவிட்டு, குகையின் வாயிலிலே பெரிய பாறையை வைத்து அடைத்து வந்தது என்ன நியாயம்? — ராஜ்யத்தை அபகரிக்க வாலி எப்போது ஒழிவான் என்று சுக்ரீவன் எதிர்பார்த்துக் கொண்டிருந்திருக்கிறான் என்பதுதானே உண்மை!

இப்பேற்பட்ட மோச குணமும், பாசமற்ற நெஞ்சும் கொண்ட சுக்ரீவனைத் தன் தோழனாக ராமன் பெறுகிறான் என்றால், ராமனின் உள்ளத்தைப் பற்றி நாம் என்ன நினைப்பது. அழியாத பாசமுள்ள தம்பியாக லக்ஷ்மணனைப் பெற்றிருக்கிற அண்ணன் என்று பாராட்டப்படுகிற ராமன், அண்ணனுக்குத் துரோகம் செய்த துரோகி சுக்ரீவனின் துணையைக் கோருவது

★ தொடர்ச்சி 12-ம் பக்கம்


செப்டம்பர் வெளியீடு
டி. ஆர். ஆர். புரொடக்ஷன்ஸ்
கோமதியின் காதலன்
கதை: "தேவன்" ஆனந்த விகடன்
டைரக்ஷன்:
ப. நீலகண்டன்
நேஷனல் பிக்சர்ஸ்...

## சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

**இந்த இதழில் தவறு செய்து, தடுமாறிய மனிதரின் கதை ஒன்று வருகிறது. அவர் நல்லவர்தான்; ஆனல் பொல்லாத ஆசைக்கு அடிமையானர். அந்தக் கொடிய நோய் அவரை 'கொடிய' மனிதனகவே ஆக்கிவிட்டது. அதற்குத் தண்டனை வேண்டாமா? பாருங்கள், அவர் மனம் தந்த சவுக்கடியும், மகன் கண்ட புதுவழியும் அவரை அழவேசெய்து விட்டது!**

# ★ தண்டனை! ★

★

"கூ" என்று கூவிவிட்டுப் புறப்பட்டது புகைவண்டி.

புகைவண்டி நிலையத்தை விட்டு வெளியே வந்தார் ஒரு மனிதர். அடர்ந்து வளர்ந்த தாடி—களையிழந்த முகம்—கந்தல் உடைகள் — பாவம், அவரைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

அவர் நடந்துகொண்டிருந்தார். நடையிலே வேகம் இல்லை; நடுக்கம் இருந்தது! சுற்றுமுற்றும் வெறிக்க வெறிக்கப் பார்த்துக்கொண்டார். பார்வையிலே தெளிவில்லை; பயம்தான் பளிச்சிட்டது! ஏன்? அந்த நடுக்கத்திற்கும் பயத்திற்கும் காரணம் தான் என்ன? தன்னை யாரும் அடையாளம் கண்டுகொண்டு விடக் கூடாதே என்ற எண்ணத்துடன் உடம்பை கூனிக் குறுகிக் கொள்ளுகிறுர். விசித்திரமான மனிதர்; வியப்பூட்டும் நடவடிக்கைகள்! காரணம் என்னவென்று அறிய ஆவல் மேலிடுகிறதல்லவா? அந்த மனிதரின் நெஞ்சைக் குடையும் நிகழ்ச்சிதான் என்ன? அதோ, அவரது மனம் பேசுகிறது; தவறு செய்து, அதனல் தடுமாற்றம் கொண்டவரின் நெஞ்சம் சவுக்கடி கொடுக்கிறது; கேளுங்கள்:

★

ஐந்து வருடங்கள்!

அப்பப்பா! இந்த ஊரை விட்டு நான் ஓடி ஐந்து வருடங்கள் உருண்டோடி விட்டன. கடல் கடந்தேன்; காடு சுற்றினேன்—பட்டினி கிடந்தேன்; பிச்சை எடுத்தேன். மனம் கேட்கிறதா? "பத்து வயதுச் செல்வனை—ஒரே ஒரு மகனைத் தனியாக விட்டுவிட்டு ஓடினுயே, முட்டாளே! அவன் என்ன பாடு படுகிறானே?... எப்படி வாடுகிறானே?... போ!... அவனைப் பார்க்கப் போ!" என்று என்னை விரட்டியது.

நான் தயங்கினேன். என்ன செய்வது? இந்த மண்ணை எப்படி மிதிப்பது? எந்த முகத்தோடு இவ்வூரில் நுழைவது?—என்று தடுமாறினேன். ஏன் என்கிறீர்களா? தவறு செய்து ஓடியவனுக்கு நிம்மதி ஏது? மன அமைதிதான் ஏது? அதுவும் நான் செய்த தவறு சாதாரணமானதா? ஆசைக்கு அடிமையாகி நான் செய்த பயங்கரக் குற்றத்தை என்னென்று சொல்வேன்! "பசுபதி; பசுபதி" என்று அடிக்கொரு முறை அன்போடு அழைக்கும் என் முதலாளிக்கே அல்லவா துரோகம் செய்து விட்டேன்!

அவர் பணக்காரர்; கோடீஸ்வரர்; நிமிஷத்திற்கு நிமிஷம்—நாளுக்கு நாள் அவரிடம்பணம் சேர்ந்து கொண்டே வந்தது. ஊரார் 'பல கதை' பேசினர். நான் நம்பவில்லை. ஏனெனில் அவர் என் முதலாளி! இந்தத் தூய எண்ணம், அவர் மேல் எந்த சந்தேகத்தையும் ஏற்படுத்தவில்லை.

ஆனல், என்ன சொல்வேன்! அந்த நல்ல மனதிலும் ஒரு நாள் களங்கம் புகுந்தது. தவறு செய்யும் போது யோசனை எங்கேயோ ஒளிந்து கொண்டு விடுகிறதே! நான் திருடினேன். இரும்புப் பெட்டியின் ஒரு தட்டில் மட்டும் கை வைத்தேன். வைர நகைகள் என் கைக்குக் கிடைத்தன. அந்தக் கணத்தில் என் நெஞ்சு பட்ட பாட்டை—துடித்த துடிப்பை எப்படி வர்ணிப்பேன்! அந்தக் கணம் மட்டுமல்ல; நகைகள் என் கைக்கு வந்த அடுத்த கணம் முதலே என் மனப் போராட்டம் உச்ச கட்டத்தை அடைந்தது. "இருதயமற்றவனே! என்ன காரியம் செய்யத் துணிந்தாய்?" என்று மனம் வசை பாடியது. நான் என்ன செய்வேன்! ஓடினேன். எங்கேயோ வந்து நின்றேன். உற்றுப் பார்த்தேன். ஊர்க் கோடியிலே உள்ள குளக்கரை!

சலசலவென்று சப்தமிட்டது குளத்து நீர். என் மனமும் அப்படித்தான் அலை மோதிக் கொண்டிருந்தது. 'திக் திக்' கென்று அடித்துக்கொண்டது. குளக்கரையிலிருந்த ஆலமரத்திடம் சென்றேன். அருகில் 'விறு விறு' என்று குழி பறித்தேன். நகைப் பெட்டியை அதில் வைத்தேன். நன்ருக மூடினேன். யாராவது பார்க்கிருர்களா என்று தேடினேன். பின் ஓடினேன். காலையில் என்னைப் போலீசார் பிடிக்கலாம்; கையில் விலங்கிடலாம்; நடுத் தெருவில் நாயைப் போல் இழுத்துச் செல்லலாம்—இந்த பயங்கர எண்ணங்கள்என்னைத் துரத்தின. ஓட ஓட விரட்டின. பத்து வயதுச் சிறுவனை—ஒரே மகன் பாலனை மறந்தேன். ஓடினேன்; ஓடிக் கொண்டேயிருந்தேன்.

இடையில் ஓடிவிட்டன ஐந்து வருடங்கள்!

இன்று திரும்பி வருகிறேன். பிள்ளைப்பாசம் என்னை அழைத்து வந்துவிட்டது. எனினும் நான் திருடன்! ஆகவேதான் இந்த நடுக்கம்—பயம் எல்லாம்!

★

பாவம், பசுபதியின் கதை எப்படியிருக்கிறது பார்த்தீர்களா?

அவர் வெகுதூரம் நடந்துவிட்டார். தன் குடிசையிருந்த பக்கம் சென்றுர். அந்தக் குடிசையையே அங்கு காணேம். மகன் எங்கே? அவர் துடித்தார். வாய்விட்டுக் கதறவேண்டும் போலிருந்தது. யாரையும் கேட்கவோ பயந்தார். அடையாளம் கண்டுவிட்டால்-'திருடனைப் பிடித்துவிட்டோம்' என்று கத்திவிட்டால்—என்ன செய்வது? மனம் புழுங்கியபடியே நடந்தார். குளக்கரை நினைவு வந்தது. வைர நகைகள் கண் முன் தோன்றின. ஓடினர்; மனதிலே மீண்டும் தோன்றிய பேராசையை அடக்க முடியாது ஓடினுர்.

குளக்கரையை அடைந்தார். ஆனல்...? என்ன இது? ஏன் இடபடி திடுக்கிடுகிருர்? ஆலமரத்தைக் காணேம்! அழகான மாளிகை ஒன்று நிமிர்ந்து நின்றது! பசுபதியின் கண்கள் அகல விரிந்தன. அந்த மாளிகை வாசலில் தொங்கிய பெரிய பலகையை—அதிலிருந்த எழுத்துக்களைப் படித்தார். பசுபதி பள்ளிக்கூடம்! பசுபதி மீண்டும் திடுக்கிட்டார். அடுக்கடுக்காகத் தாக்குதல்களைத் தாங்க முடியாத அவரது மனம் தடுமாறியது!

"என் பெயரில் பள்ளியா? என்ன இது? ஒரே புதிர்! புரியாத சிக்கல்!" என்று முணுமுணுத்தார். ஏதோ துணிவு கொண்டார். பள்ளிக்குள் நுழைந்தார். அங்கே அவரை இன்னும் திகைக்க வைக்க ஒரு உருவம் காத்திருப்பது எப்படித் தெரியும்?

"யாரது? என்ன வேண்டும் உங்களுக்கு?" என்று ஒரு குரல் பரிவுடன் அவரை அழைத்தது.

பசுபதி திடுக்கிட்டார். அந்தக் குரல் யாருடையது? சடக்கென்று திரும்பினர். அழைத்த உருவத்தை உற்றுப் பார்த்தார். மறுகணம் "அப்பா" என்று அலறிக் கொண்டே ஓடிவந்தான் குரலுக்குரியவன்! "பாலா" என்ற பதில் சப்தம் எழும்பியது. அப்பாவும் மகனும் தழுவிக் கொண்டார்கள்.

"எங்கே அப்பா போனீர்கள், என்னை விட்டுவிட்டு?" —அழுது கொண்டே கேட்டான் பாலன்.

"முதலில் நீ சொல்; இது யாருடைய பள்ளி?" —அப்பா பதட்டத்துடன் கேட்டார்.

"உங்கள் பெயரிலே உள்ள ஒரு பள்ளி! அது ஒரு கதையப்பா! சென்ற வருஷம் புயல் அடித்ததே, உங்களுக்குத் தெரியுமா? அப்போது இங்கிருந்த ஆலமரம் விழுந்துவிட்டது. பாதையோரத்தில் கிடந்த மரத்தை அப்புறப்படுத்த நான் துணிந்தேன். குழி பறிக்கப் பட்ட இடத்தில், ஒரு பெட்டி கிடைத்தது. அத்தனையும் வைர நகைகள்! அதை விணுக்க—அதை வைத்து சுக வாழ்வு நடத்த நான் விரும்பவில்லை. ஊர் பெரிய மனிதர் ஒருவரின் துணையுடன் இந்தப் பள்ளியைத் தொடங்கினேன். உங்களைப் பிரிந்த வேதனையை மறக்க இந்தப் பெயரை வைத்தேன்" என்ருன் பாலன்.

"அதிருக்கட்டும்; மாடி வீட்டுப் பெரிய பண்ணைக்காரர் சௌக்கியமா?" என்று கேட்டார் பசுபதி, நடுக்கத்துடன்.

"யார்? உங்கள் முதலாளியா? தெரியாதா உங்களுக்கு? நீங்கள் காணுமல் போனீர்களே, அதற்கு மறுநாள் காலையிலேயே அவரைப் போலீசார் கைது செய்து விட்டார்களே!"

"என்ன? கைது செய்து விட்டார்களா? ஏன்?"...படபடப்புடன் கேட்டார் பசுபதி.

"கள்ள நோட்டு அடித்து, பணம் சேர்த்தாராம்! அவரது சொத்தை யெல்லாம் பறிமுதல் செய்து விட்டார்கள்! பத்து வருடம் சிறைத் தண்டனையும் தந்து விட்டார்கள்!" என்ருன் பாலன்.

தந்தையின் முகத்தைக் கவனித்தான். சற்று நேர மௌனம்—"ஏனப்பா அழுகிறீர்கள்?" என்று துடிப்புடன் கேட்டான் பாலன்!

பதிலில்லை! அந்த அழுகைக்குப் பொருள், பசுபதியைத் தவிர வேறு யாருக்குத்தான் புரியும்?

—சொர்ணம்



# 'எழுத்தாணி'

கே. சீனிவாசன், கோயமுத்தூர்.

(?) சில பத்திரிகைகளைப் படிக்கும்போது ஆத்திரமும், வெறுப்பும் ஏற்படும் தன்மையில் ஆபாசமாகவும், பொய். புனைசுருட்டுகள் கலந்ததாகவும் எழுதப்படுகின்றனவே; அவைகளை என்ன செய்யலாம்?

அவைகளை வாங்காமலே இருந்து விடலாம்.

மல்லிகா, பழையூர், பா. நா. பாளையம்.

(?) திராவிட முன்னேற்றக் கழகம் தனது லட்சியத்தை அடைய அமைதி வழியையே நாடுவதாக உறுதி பூண்டிருக்கிறதா?

ஆமாம்! தன்னைத் தானே தியாகம் செய்துகொண்டு, தாயக விடுதலைக்குப் போராடும் தன்மானக் காளையருக்கே திராவிட முன்னேற்றக் கழகப் பாசறையில் பயிற்சி தரப்படுகிறது.

இராம. வேலாயுதம், மைடான், இந்தோனேஷியா.

(?) நம் நாடு, ஏனைய நாடுகளைவிட முன்னேறி விட்டது என்கிறார்களே; எவ்வகையில்?

வெளி நாடுகளுக்கு மக்களை அனுப்பி, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கிடும் வகையில!

கி. சுப்ரமணியன், தத்தமங்கலம், பாலக்காடு.

(?) ஆச்சாரியார் இப்போது ஊசிப் பிரச்சினையில் கவனம் செலுத்துவது ஏன்?

அவர் எப்போதுமே 'ஊசிப்போன' பிரச்சினைகளில் கவனம் செலுத்திக் கொண்டேதான் உயிர் வாழ்கிறார்.

(●) நா. ரத்தினம், பொடிக்காம் பாளையம்.

(?) சிலப்பதிகாரத்தில், கண்ணகி சேர நாடு வந்து, வேங்கை மரத்தடியில் நின்றதாகவும், விண்ணுலகிலிருந்து விமானம் வந்ததாகவும், அதில் கோவலனோடு அவள் போய்விட்டதாகவும் இருக்கிறதே: அதுபற்றி உங்கள் கருத்தென்ன?

இவையெல்லாம் சிலப்பதிகாரத்தில் இணைந்துள்ள புராணக் கற்பனைகள்தான்! நாம சிலப்பதிகாரத்தைப் பாராட்டுவது— அதிலே காணப்படும் சேர சோழ பாண்டிய நாடுகள் பற்றிய வரலாறுகளுக்காகவும், வளம் பற்றிய குறிப்புகளுக்காகவுமேதான்! நம்ப முடியாத கற்பனைகள் அதில் உண்டு. ஆனால், கம்பனைப் போல இளங்கோவடிகள் திராவிட இனத்தைக் காட்டிக் கொடுத்தாரில்லை! ஆரியக் கனக விசயர் அடக்கப்பட்ட வீரக் காதையையும் சிலப்பதிகாரம், முழங்குகிறது!

இந்த வாரம் பரிசு பெறும் தோழர்:
(●) நா. ரத்தினம்,
பொடிக்காம் பாளையம்,
பூளவாடி (அஞ்சல்)
(கோவை மாவட்டம்)

நெல்லி தமிழ்க் கோவன், சென்னை-5.

(?) உறங்காமல் உறங்குபவர் யார்?

நேரு சர்க்கார்!

கோண்டல், வள்ளுவக்குடி.

(?) இந்தியாவில் உள்ள மக்கள் யாவராலும் போற்றப்படுவது யார்? ஏன்?

புத்தர்! ஏனென்றால் அவர் இறந்து விட்டார். அதோடு அவரைக் கடவுளாகவும் ஆக்கிவிட்டார்கள். பகுத்தறிவுவாதிகள் புத்தர் என்ற புரட்சி மனிதரைப் போற்றுகிறார்கள. பக்தர்களோ, அவரது கோயில்களைப் போற்றுகிறார்கள். 'பகவான் புத்தர்' என அழைத்து அஞ்சலி செய்கிறார்கள்.

கே. பன்னீர் செல்வம், விளாகம்.

(?) கடவுள், எருமை நெய்யை விரும்பாமல், பசு நெய்யை விரும்புகிறாரே; ஏன்?

அய்யாகளுக்குப் பிடித்தமானது தானே ஆண்டவனுக்கும் பிடிக்கும்!

சூ. அ. சௌந்தரராசன், சூரமங்கலம்.

(?) வாழ்க்கையின் கடைசிப் பக்கம் மரணத்தின் முதல் பக்கம் என்று எழுதினீர்களே; அப்படியானால் மரணத்தின் கடைசிப் பக்கம் எது?

அனுதாபம்!

எம். குருசாமி, விளாம்பட்டி.

(?) பிசாசுகளைப் பார்த்ததுண்டா?

உண்டு; உலக அழகிப் போட்டியின் செய்திப் படக் காட்சியின் போது!

## குறளோவியம்......

★ 1-ம் பக்கத் தொடர்ச்சி

போகும் நேரம்; அதனால் அவன் கண்டதில்லை; "அந்த காலை" முகத்தை! இப்போதோ. அவள் விலகி நின்று பேசுகிறாள். அதனால் அவன் அவள் முகத்தைக் கூர்ந்து கவனிக்கிறான். கோபத்திலும்கூட அவள் முகம் புது எழில் கொட்டுகிறது. சினத்தால் துடிக்கும் செவ்விதழ்களிலே. அவளையு மறியாமல் புன்னகை. மின்னலிடுகிறது! அந்தப்பொலிவை ரசிக்கிறான்-புது இன்பம் காணுகிறான் காளை! கண்வழியே கள் பருகுகிறான்-வைத்த கண்ணைப் பெயர்த்தெடுக்க முடியாமல் தவிக்கிறான்-அவளோ ஊடலின் உச்சிக்குப் பயணம் போகிறாள்.

"என்னையே இப்படி உற்றுப் பார்க்கிறீர்களே; காரணம் என்ன? யாருடைய அழகோடு என்னை ஒப்பிட்டுப் பார்க்கிறீர்கள்?" என்று கோபிக்கிறாள். என்னதான் செய்வான்; 'பாவம்' அவன்! பார்த்தாலும் குற்றம்-பார்க்காவிட்டாலும்; "அவ்வளவு வெறுப்பா?" என்ற குற்றப் பத்திரிகை வாசிக்கப்படும்! இந்த நிலையில் உள்ள ஒரு காதலனைப் பற்றிய குறள் இது:-

"நினைத்து இருந்து நோக்கினும்
காயும் அனைத்துநீர்
யார்உள்ளி நோக்கினீர் என்று."

★

## சக்கரவர்த்தியின் திருமகன்....

★ 9-ம் பக்கத் தொடர்ச்சி

எவ்வகையில் பொருத்தமுடையது?—என்பதை ஆச்சாரியார் தான் விளக்க வேண்டும். அண்ணனுக்கும், அரக்கனுக்கும் போர் நடந்ததாம். ரத்த வெள்ளம் குகை வழியே புரண்டு வந்ததாம். அரக்கன் செத்ததாக நினைக்காமல், அண்ணன் செத்ததாக நினைத்தானாம். தன்னுயிரைக் காத்துக் கொள்ள குகையை மூடி விட்டானாம். பிரஜைகள் விரும்பினார்களாம் முடி சூட வேண்டுமென்று! அவனும் சூடிக் கொண்டானாம்! அண்ணன் திரும்பி வந்ததும் உண்மையைச் சொன்னானாம்; அவன் கேட்கவில்லையாம்! அகப்பட்டுக்கொண்ட பிறகு — சதி வெளிப்பட்ட பிறகு — தப்பித்துக்கொள்ள போலி நாடகம் ஆடியிருக்கிறான் துரோகி! அவனுக்குத் துணை வருகிறான் ராமன்! இங்கே ஆச்சாரியார் மழுப்புகிறார்.

"வாலியின் நடவடிக்கையிலும் பெருங் குற்றமில்லை! சுக்ரீவனின் காரியங்களிலும் பெருங் குற்றம் சொல்வதற்கில்லை."

—6-3-55—'கல்கி.'

ஆச்சாரியாரின் தீர்ப்பு இது!—அப்படியானால், இரு சகோதரர்களுக்கும் சமாதானம் செய்து வைத்து, இருவரின் துணையையும் பெறுவதுதானே இராமன் செய்கையாக இருந்திருக்க வேண்டும்! அப்படியில்லையே; ராமனின் செயல்! ஏன்? ஏன் ஆச்சாரியாரே; ஏன்?

[தொடரும்]




### தஞ்சை

28-8-55 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு, தஞ்சை திலகர்திடலில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் தோழர் க அன்பழகன் அவர்கள் பேசுவார்.

★

### பெங்களூர் (சீராமபுரம்)

28-8-55 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு, சீராமபுரம் வ. உ. சி. திடலில் லேபர் காலனி 'பகுத்தறிவு மன்ற'த் துவக்க விழா நடைபெறும். தோழர் எஸ். வி. பதி அவர்கள் தலைமையில், தோழர்கள் ப. செல்வராசன், வீ. முத்து—இன்னும் பலர் பேசுவர்.

★

### கடலூர்

28-8-55 ஞாயிறுகாலை 9 மணிக்கு கடலூர் நியூ சினிமாவில் மாநில மாநாட்டு நிதிக்காக சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெறும். தோழர் வ. சிவப்பிரகாசம் அவர்கள் தலைமையில், அறிஞர் அண்ணா, தோழர் கே. கோவிந்தசாமி—ஆகியோர் பேசுவர்.

நன்கொடை—அணா 8, 4.

---

மாநில மாநாட்டு நிதிக்காக
4-9-55 ஞாயிறு
மாலை 6-மணிக்கு
சென்னை கோகலே மன்றத்தில்
பன்மொழிப் புலவர்:
கா. அப்பாதுரை
எம். ஏ., எல். டி.
அவர்கள் தலைமையில்

**மு. கருணாநிதி**

சொற்பொழிவாற்றுவார்.
நன்கொடை: : ரூ 1, அணா 8.
—சென்னை மாவட்ட தி. மு. க.

---

## தேவை

நமது "முரசொலி" பத்திரிகைக்கு விளம்பரம் சேகரிக்க, திறமையும், அனுபவமும் உள்ள ஏஜண்டுகள் தமிழ்நாட்டில் ஒவ்வொரு முக்கிய நகரிலும், ஊரிலும் தேவை. 25 சதவீதம் கமிஷன் தரப்படும்-

விபரங்களுக்கு:-
"முரசொலி"
4-128. மவுண்ட் ரோடு.
சென்னை-6.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி. 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6.